விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 109 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 24 திங்கட்கிழமை (07.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பிரதமர் மோடிக்கு விசேட விருந்து




▷15

## பாரதம் திரும்பினார் பிரதமர் நரேந்திர மோடி



▷02

## புனித மஹா போதியை வழிபட்ட பாரதப் பிரதமர்



▷15

## இலங்கையுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம்


### பாரதப் பிரதமர் மோடியைச் சாடுகிறார் வைகோ



(சென்னை)

இலங்கை இராணுவத்துடன் பாரதப் பிரதமர் மோடி இராணுவ ஒப்பந்தம் செய்திருப்பது தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைக்கும் செயல் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார். ▷15

## ராமர் பாலத்தை ராம நவமியில் தரிசித்தார் பிரதமர் மோடி



▷15

## தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 20ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு நாட்டில் உள்ள அனைத்து கத்தோலிக்கத் தேவாலயங்களுக்கும் விசேட பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ▷15

## தேசிய மக்கள் சக்தி எம்.பி உயிரிழப்பு



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலமானார்.

கேகாலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் ▷15

### பிரதமர் மோடியின்

# திருக்கோணேஸ்வர வழிபாடு திட்டமிட்டுத் தடுக்கப்பட்டது

### அரசியல் நோக்கர்கள் ஆரூடம்

*(கொழும்பு)* இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் மோடி திருகோணமலைக்குச் சென்று அங்கு திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடு செய்வதை பௌத்த பீடங்களும் பௌத்த ஆதிக்க சக்திகளும் விரும்பவில்லை. இதன் காரணமாகவே பிரதமர் மோடி திருகோணமலைக்குச் செல்வது பாதுகாப்பானதல்ல எனக் கூறி, அவரின் திருகோணமலைப் பயணம் தடுக்கப்பட்டதாக அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## போதைப் பொருள் பாவனையை ஒடுக்கக்கோரிப் போராட்டம்

### முல்லை.மாணிக்கபுரத்தில் திரண்ட பொதுமக்கள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாணிக்கபுரம் பகுதியில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தி தமது இளஞ்சந்ததியினரைக் காப் ▷15

## 44% அமெரிக்க வரி விதிப்பு ஆடைத் தொழில் ஆபத்தில்

### தொழில் அமைச்சர் தகவல்

(கொழும்பு)

நாட்டின் பெரும்பாலான ஏற்றுமதிகள் ஆடைத் துறையில் தங்கி இருப்பதால், அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிக் கொள்கையால் நாட்டின் ஆடைத் தொழில் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகும் என தொழில் அமைச்சரும் பொருளாதார ▷02

## போதை மாத்திரைகளுடன் யாழில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.நகரப் பகுதியில் போதை மாத்திரைகளின் பரவல் அதிகரித்திருப்பதாகவும் விற் ▷15

## ஊரெழுவில் இளைஞன் சடலமாக மீட்பு

(ஊரெழு)

யாழ்ப்பாணம் ஊரெழுப் பகுதியில் நேற்று இளைஞன் ஒருவரது சடலம் சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. ▷02

## பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு சீனா எதிர்வினையாற்றும்

### முன்னிலை சோஷலிசக் கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்தான பாதுகாப்பு ஒப்பந்தங்களுக்கு சீனா உடன் பதிலளிக்கத் தொடங்கியுள்ளதாக முன்னிலை சோஷலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக ▷15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44% அமெரிக்க...

அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த தெரிவித்தார்.

அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிக்கொள்கை இலங்கையை எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இருப்பினும் இந்த நாட்டிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் குறித்த இறக்குமதி வரிக்கொள்கை பொருந்தும் என்றும் அமைச்சர் விளக்கினார்.

அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிக்கொள்கை மற்றும் அதன் விளைவாக நாட்டைப் பாதித்த பிரச்சினைகள் குறித்து, இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் அரசாங்கம் ஒரு தீர்வைக் கோரியதாகவும் அதற்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 44% வரி விதிக்க முடிவு செய்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7,4)

## பாரதம்...

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பினார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில் இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு" எனும் எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த 4 ஆம் திகதி மாலை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார்.

நேற்று முன்தினம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அவருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டதுடன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் சந்திப்பும் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது இலங்கை - இந்தியாவிற்கு இடையில் 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதுடன் வடக்கு, கிழக்கு, மலையக தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலும் பிரதமர் மோடி ஈடுபட்டிருந்தார்.

ஐக்கிய இலங்கையில் தமிழ் சமூகத்தின் சமத்துவம், கௌரவம், நீதி நிறைந்த வாழ்க்கைக்கான இந்தியாவின் அசைக்கமுடியாத அர்ப்பணிப்பை தாம் இதன்போது மீண்டும் வலியுறுத்தியதாகவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கான விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கையின் மிக உயரிய விருதான ஸ்ரீலங்கா மித்ர விபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-7,4)

## திருக்கோணேஸ்வர...

இலங்கைக்கு வருகைதந்த இந்தியப் பிரதமர் மோடி திருக்கோணேஸ்வரம் சிவன் ஆலயம், அநுராதபுரத்திலுள்ள ஸ்ரீ மகா போதி ஆகிய வழிபாட்டுத் தலங்களுக்கு நேரில் சென்று வழிபடுவதாகவும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைப்பதாகவும் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்தை பௌத்த அடையாளங்களும் மற்றும் படையினரின் முகாம்களும் ஆக்கிரமித்திருப்பதன் காரணமாகவும் பிரதமர் மோடி அங்கு சென்றால் திருக்கோணேஸ்வரர் ஆலய சுற்றாடலில் மேற்கொண்டு பௌத்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைச் செய்ய முடியாமல் போகும் என்பதாலும் பாதுகாப்பு இல்லையெனக் கூறி பிரதமர் மோடியின் திருகோணமலை விஜயம் தடுக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

அதேநேரம் அநுராதபுரம் ஸ்ரீ மகாபோதி விகாரைக்கான பிரதமர் மோடியின் விஜயத்தை சம்பந்தப்பட்ட தரப்புகள் தடுக்கவில்லை எனவும் அநுராதபுரத்திற்குச் செல்வதில் பிரதமர் மோடிக்கு உயர்ந்த பாதுகாப்பு இருந்ததா என்றும் அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ந-7,4)

## ஊரெழுவில்...

இதில் ஊரெழு மேற்கைச் சேர்ந்த 33 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.


சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் இளைஞனின் சடலத்தினை மீட்டதுடன் ஆரம்ப கட்ட விசாரணைகளையும் முன்னெடுத்தனர்.

மரண விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கோப்பாய் பொலிஸாரால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பாரப்படுத்தப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ந-7,4)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.நாகையா செந்தில்நாதன்
கல்வி முதுமாணி
(M.Ed 2nd Upper)

யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் M.Ed பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியரை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்தி மகிழ்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம்.
(3861)

பல ஆயிரம் கடந்த பதிவுகள்...

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள்
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com

துயர் பகிர்கின்றோம்

எமது சக ஊழியர்
திருமதி ஜோர்ஜ் ஜெயசீலன் ஜென்சி றாகிகா
அவர்களின் பாசமிகு தந்தை



அமரர் அல்பிறட் ஜேம்ஸ்

அவர்கள் 05.04.2025 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர்வு 14.01.1948
உதிர்வு 05.04.2025

முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள்,
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை,
பிராந்தியக் காரியாலயம், யாழ்ப்பாணம்.
(C4638)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரம்பின் வரி விதிப்பால்

# பொருளாதார சுனாமி ஏற்படும்

## எச்சரித்த எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

**ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் அமெரிக்காவின் வரிக் கொள்கை அமுல்படுத்தப்படும். இந்த வரி விதிப்பு குறித்து உலக நாடுகள் அமெரிக்காவோடு பேசி வருகின்றன. நமது நாடு இதுவரையில் எந்த நடவடிக்கையையும் எடுத்த பாடில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**



நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளில் 40% ஆனவை அமெரிக்காவிற்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

350,000 நேரடி வேலைகளையும் 1 மில்லியன் மறைமுக வேலைகளையும் இது உருவாக்கித் தருகின்றது. இன்று அவர்களது தொழில்கள் ஆபத்தில் காணப்படுகின்றன. இந்த தொழில்துறையினர் மற்றும் தொழிலாளர்கள் நிர்க்கதிகளுக்கு ஆளாகியுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டினார்.


அரசிடம் இது குறித்து இன்னும் சரியான திட்டமொன்று இல்லை. இந்த வரிகளால் ஆடைத் தொழில் சரிந்தால் பொருளாதார சுனாமி ஏற்படும். ஐக்கிய மக்கள் சக்தியைச் சந்திக்க வரும் இராஜதந்திரப் பிரதிநிதிகளிடம் நாட்டுக்கு பக்க பலத்தைக் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம். நான் நாட்டையும் மக்களையும் தான் மதிக்கிறேன். துன்பப்படும் மக்களின் துன்பத்தை மூலதனமாக்கி ஆட்சியைப் பிடிக்கும் கபட அரசியலில் நான் ஈடுபடவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

எமக்கு உதவுமாறு பிரதமர் மோடியிடமும் கேட்டுக் கொண்டேன். நரேந்திர மோடியைச் சந்தித்தபோதும், நமது நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு இந்தியச் சந்தை வாய்ப்பை மேலும் விரிவுபடுத்தித் தருமாறு வேண்டுகோள் விடுத்தேன்.

வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டு மக்கள் மீண்டு வருவதற்கான எமது முயற்சிகளுக்கு பக்க பலத்தை பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டேன். வங்குரோத்தான நேரத்திலும், இந்தியா எங்களுக்கு அதிக ஆதரவை வழங்கியது. எதிர் காலத்திலும் இந்தியாவின் இவ்வாறான ஆதரவு எமக்குத் தேவை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

## அநுராதபுரம்-மஹோ

# ரயில் சமிக்ஞை அமைப்பை திறந்து வைத்தார் மோடி



(அநுராதபுரம்)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் இந்திய அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும் ஒரு திட்டமான அநுராதபுரம்-மஹோ ரயில் சமிக்ஞை அமைப்பையும், புதிதாக மேம்படுத்தப்பட்ட மஹோ-ஓமந்தை ரயில் பாதையையும் நேற்று திறந்து வைத்தனர்.

இந்தத் திட்டம் வடக்குப் பாதையின் மஹோ-அநுராதபுரம் பிரிவில் மேம்பட்ட சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு அமைப்பை நிறுவுவதை உள்ளடக்கியது. முன்னதாக, இந்தியப் பிரதமர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் அநுராதபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மகா போதிக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். (நி-8)

# மதுவரி வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

2025ஆம் ஆண்டில் மதுவரி வருமானம் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இந்த ஆண்டில் கடந்த மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 61.3 பில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது கடந்த 2023ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 117 வீத வளர்ச்சியாகும் என மதுவரித் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், 2025 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 48 பில்லியன் ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்பட்டதாகவும் மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

# முட்டை விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் முட்டையின் விலை மீண்டும் உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த வாரம் 25 ரூபாவிற்கும் குறைவாகக் காணப்பட்ட முட்டையின் விலை, தற்போது 40 ரூபாவாக அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பண்டிகை காலத்தில் முட்டையின் விலை மேலும் அதிகரிக்கும் என விற்பனையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் எதிர்காலத்தில் முட்டை ஒன்றின் விலை 50 ரூபாயாக அதிகரிக்கப்படுமென அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் முட்டைக்கான நியாயமான விலையை நிர்ணயம் செய்து முட்டை உற்ப்த்தியாளர்களையும் நுகர்வோரையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (நி-8)

# முன்னாள் ஜனாதிபதிகள் இன்று விசேட சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பங்கேற்கும் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இலங்கை எதிர்கொள்கின்ற பொருளாதார மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை கருத்தில் கொண்டு இடம்பெறும் இந்தச் சந்திப்பை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்பாடு செய்துள்ளார்.

அமெரிக்காவின் வரிவிதிப்பு உள்ளிட்ட உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இலங்கைக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்துவதாக மாறியுள்ளது.

இந்த சவால்களை முறையாக எதிர்கொள்ளாவிடின் தேசிய பொருளாதாரம், அரசியல் மற்றும் பாதுகாப்பு என்பன சீர்குலைந்து விடும்.

எனவே முன்னாள் ஜனாதிபதிகள் என்ற வகையில், நாடு எதிர்கொள்கின்ற புதிய சவால்களுக்கு ஏற்ப முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன் போது ஆராயப்பட உள்ளது.

அத்துடன், இலங்கையின் பாதுகாப்பு படைகளின் முன்னாள் தளபதிகளுக்கு எதிராக பிரித்தானியா விதித்துள்ள தடையைத் தொடர்ந்து, எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் மீளாய்வு கூட்டத்தொடரின் போது இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நாடு என்ற வகையில் இதனை எவ்வாறு எதிர்கொள்வது போன்ற விடயங்களும் முன்னாள் ஜனாதிபதிகளின் சந்திப்பில் கவனத்தில் கொள்ளப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்



மண்ணில் 04 . 10 . 1990

விண்ணில் 24 . 02 . 2025

கடந்த 24.02.2025 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி

**அமரர். அகிலன் தனுசியா**

கடந்த 24.02.2025 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் ஒட்டுசுட்டான் சிவன் கோவிலடியைச் சேர்ந்த அகிலன் தனுசியா புதுக்குடியிருப்பு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த க.சவுந்தரராஜன் சறோஜினிதேவி தம்பதி யினரின் மகளுமாவார். அவர்களின் 45 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை 09.04. 2025 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற இருப்பதால் அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

தகவல்:
கணவர்: அகிலன்,
பெற்றோர்: க.சவுந்தரராஜன், சறோஜினிதேவி
மற்றும் குடும்பத்தினர்

சிவன் கோவிலடி,
ஒட்டுசுட்டான்.
077 2416935

(C-2633)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சீறினர்’ சிராஜ், சுப்மன் ‘சிதறியது’ சன்ரைசர்ஸ்



## குஜராத்துக்கு குதூகல வெற்றி



சிராஜ், அணித் தலைவர் சுப்மன் கில்லின் அசத்தல் ஆட்டம் கைகொடுக்க குஜராத் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை வீழ்த்தியது.

ஹைதராபாத்தில் நடந்த இந்தியன் பிரிமியர் லீக் போட்டியில் ஹைதராபாத், குஜராத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணித் தலைவர் சுப்மன் கில், பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**சிராஜ் அசத்தல்:**

ஹைதராபாத் அணிக்கு மொஹமட் சிராஜ் தொல்லை தந்தார். இவரது "வேகத்தில்" டிராவிஸ் ஹெட் (8), அபிஷேக் சர்மா (18) வெளியேறினர். இஷான் கிஷான் (17) நிலைக்கவில்லை. ஹைதராபாத் அணி 50 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டை இழந்து தடுமாறியது. பின் இணைந்த நிதிஷ் குமார் ரெட்டி, கிளாசன் ஜோடி ஓரளவு கைகொடுத்தது. நான்காவது விக்கெட்டுக்காக 50 ஓட்டங்கள் சேர்த்தபோது சாய் கிஷோர் "சுழலில்" கிளாசன் (27) போல்டானார். தொடர்ந்து அசத்திய கிஷோர் பந்தில் நிதிஷ் குமார் (31) ஆட்டமிழந்தார்.

**கம்மின்ஸ் ஆறுதல்**

சிராஜ் பந்தில் அனிகேத் (18), சிம்ர்ஜீத் சிங் (0) "பெவிலியன்" திரும்பினர். இஷாந்த் சர்மா வீசிய கடைசி ஓவரில் அணித் தலைவர் கம்மின்ஸ் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார்.

ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 152 ஓட்டங்களை எடுத்தது. கம்மின்ஸ் (22), ஷமி (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**சுப்மன் விளாசல்:**


எட்டக்கூடிய இலக்கை விரட்டிய குஜராத் அணிக்கு சாய் சுதர்சன் (5), பட்லர் (0) ஏமாற்றினர். பின் இணைந்த அணித் தலைவர் சுப்மன் கில், தமிழகத்தின் வாஷிங்டன் சுந்தர் நம்பிக்கை அளித்தனர். ஷமி வீசிய 5வது ஓவரில் வரிசையாக 2 பவுண்டரி அடித்தார் கில். சிமர்ஜீத் சிங் வீசிய 6வது ஓவரில் வாஷிங்டன் 2 சிக்சர், 2 பவுண்டரி விளாச 20 ஓட்டங்கள் கிடைத்தது. ஜீஷான் அன்சாரி பந்தை பவுண்டரிக்கு விரட்டிய கில், 36 பந்தில் அரைச்சதம் எட்டினார். மூன்றாவது விக்கெட்டுக்காக 90 ஓட்டங்கள் சேர்த்த போது மொஹமட் ஷமி "வேகத்தில்" வாஷிங்டன் சுந்தர் (49 ஓட்., 2 சிக்சர், 5 பவுண்டரி) அரைச்சத வாய்ப்பை இழந்து வெளியேறினார்.

"இம்பாக்ட்" வீரராக வந்த ரூதர்போர்ட், அபிஷேக் சர்மா வீசிய 15வது ஓவரில், 4 பவுண்டரி விளாசினார். தொடர்ந்து அசத்திய ரூதர்போர்ட், கம்மின்ஸ் வீசிய 17ஆவது ஓவரில் வரிசையாக ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்து கைகொடுத்தார். குஜராத் அணி 16.4 ஓவரில், 3 விக்கெட்டுக்கு 153 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. கில் (61ஓட்., 9 பவுண்டரி), ரூதர்போர்ட் (35) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ந-7,4)

**100 விக்கெட்**

ஹைதராபாத்தின் அபிஷேக் சர்மாவை ஆட்டமிழக்கச் செய்த குஜராத் வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் சிராஜ், பிரிமியர் லீக் அரங்கில் தனது 100வது விக்கெட்டை பதிவு செய்தார். இதுவரை 97 போட்டிகளில் 102 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். இம்மைல்கல்லை எட்டிய 26ஆவது வீரரானார்.

# அவுட்டான கோபத்தில் துடுப்பை தூக்கி போட்ட சஞ்சு





ஐ.பி.எல் 2025 சீசனின் 18 ஆவது ஆட்டம் சண்டிகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் ராஜஸ்தான் ரோயல்ஸ், பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற பஞ்சாப் கிங்ஸ் அணி கப்டன் ஷ்ரேயாஸ் பந்து வீச்சைத் தேர்வு செய்தார்.


அதன்படி முதலில் ஆடிய ராஜஸ்தான் ராயல்ஸ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 205 ரன்கள் குவித்தது. அதிரடியாக ஆடிய ஜெய்ஸ்வால் அரைச்சதமடித்து 67 ரன்னில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து, 206 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் கிங்ஸ் அணி களமிறங்கியது. நேஹல் வதேரா மட்டும் அதிரடியாக ஆடி 41 பந்தில் 3 சிக்சர், 4 பவுண்டரி உட்பட 62 ரன்கள் குவித்தார். இறுதியில், பஞ்சாப் கிங்ஸ் 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 155 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் ராஜஸ்தான் 50 ரன்கள் வித்தியாசத்தில் 2 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

இப்போட்டியில் அதிரடியாக விளையாடிய ராஜஸ்தான் கப்டன் சஞ்சு சாம்சன் 38 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அப்போது சஞ்சு சாம்சன் கோபத்தில் துடுப்பைத் தூக்கிப்போட்டார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலானது. (நி-8)

# மும்பை அணியில் மீண்டும் பும்ரா



வான்கடே மைதானத்தில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதிரான 2025 இந்தியன் பிரீமியர் லீக் போட்டிக்கு முன்னதாக ஜஸ்பிரித் பும்ரா மும்பை இந்தியன்ஸ் அணியில் மீண்டும் இணைந்துள்ளார்.

ஆனால் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் விளையாடும் 11 பேர் கொண்ட அணியில் இடம்பெற வாய்ப்பில்லை.

இதனால் அவர் விளையாடுவாரா என்பதில் சந்தேகம் உள்ளது.

முதுகு அறுவை சிகிச்சைக்குப் பிறகு பும்ரா பெங்களூரில் உள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் சிறப்பு மையத்தில் மறுவாழ்வு பெற்று வந்தார்.

2013 ஆம் ஆண்டு ஐ.பி.எல் இல் அறிமுகமானதிலிருந்து அவர் மும்பை அணியின் பந்துவீச்சுத் தாக்குதலில் ஒரு முக்கிய காரணியாக இருந்து வருகிறார்.

பல ஆண்டுகளாக, அவர் அந்த அணிக்காக 133 போட்டிகளில் விளையாடி 165 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். முதுகு வலி காரணமாக அவர் தவறவிட்ட ஒரே சீசன் 2023 ஆகும்.

ஜனவரி 4 ஆம் திகதி சிட்னியில் நடந்த இறுதி பார்டர்-கவாஸ்கர் டிராபி டெஸ்டின் இரண்டாவது நாளின் போது அவருக்கு காயம் ஏற்பட்டது.

இதன் விளைவாக, கடந்த மாதம் இந்தியா வென்ற சம்பியன்ஸ் டிராபியில் இருந்து அவர் வெளியேற்றப்பட்டார்.


2023 மார்ச் மாதம் அறுவை சிகிச்சைக்குப் பின்னர் அவரது முதுகில் ஏற்பட்ட முதல் பின்னடைவு இதுவாகும்.

கடந்த மெகா ஏலத்திற்கு முன்னதாக, மும்பை இந்தியன்ஸ் அணி பும்ராவை 18 கோடி இந்திய ரூபாவுக்கு தக்க வைத்துக் கொண்டது.

அதன் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் மீதான நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியது.

மும்பை அணி தற்போது நான்கு போட்டிகளில் இருந்து ஒரே ஒரு வெற்றியுடன் புள்ளிப்பட்டியலில் ஏழாவது இடத்தில் உள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# என்றுமுள்ள யோகசுவாமி

சிவயோகசுவாமிகளின் அன்பர்களில் ஒருவர் சிவ குமாரான் என்பவர். அவர் சிறுவனாக இருக்கும் போதே தந்தையாரது கையைப் பிடித்துக் கொண்டு சென்று சிவயோக சுவாமி களைத் தரிசனம் செய்தவர்.

இளைஞனான பின் தனி யனாகவும் சென்று தரி சித்து வந்தார். அவ்வாறு தரிசித்து வந்த ஒருநாள், சுவாமிகள் தமது காலுக்கு எண்ணெய் தடவி விடுமாறு பணித்தார். அன்று பிடித்த சுவாமிகளின் பாதத்தை அவர் என்றும் மறந்த தில்லை. அவருக்கு நற்சிந் தனைப் பாடல்கள் பல மனன மாயிருந்தன. அவர் நாள் தோறும் சிறிதுநேரம் நற் சிந்தனை படிப்பதை வழக்க மாகக் கொண்டிருந்தார்.

சிவதொண்டன் ஏடு இல் லம் வந்ததும் பூசை அறை யில் கொண்டுவைத்துப் பூசித்தபின் கவனமாகப் படிப்பார். ஏட்டில் வரும் சுவாமி நினைவுகள் அவர் மனத்தில் என்றும் நிலைத்தி ருந்தன.

அவர் சுவாமிகள் திருவடி கலப்புற்ற பின்னர் மார்க் கண்டு சுவாமிகளைத் தரி சித்து வந்தார். சுவாமிக ளிடத்துப் பெரும் பக்தி பூண்டி ருந்தது போலவே மார்க் கண்டு சுவாமிகளிடத்துப் பேரன்பு கொண்டிருந்தார்.

அவர் ஒருநாள் மார்க் கண்டு சுவாமிகளிடம் 'யோக சுவாமிகள் திருவடி கலப் புற்ற பின்னரும் நீங்கள் கண்டிருக்கிறீர்களோ சுவாமி' எனக் கேட்டார். அதற்கு மார்க்கண்டு சுவாமிகள் "ஓம் கண்டிருக்கிறேன். அவரு க்கு நான் அமுது பரிமாறி னேன். அவர் அமுது அருந் தினார்". மார்க்கண்டு சுவா மிகள் 'வடதிசை காட்டும் கருவி' போன்று சுவாமி நினைவாகவே இருந்தவர். யோக சுவாமிகள் திருவடிக் கலப்பின் பின்னரும் அவ ருக்குக் காட்சியளித்தார்.

செல்லத்துரை சுவாமிகள் ஆண்டுதோறும் ஆனி உத் தர தரிசனத்துக்காகச் சிதம் பரம் செல்பவர். செல்லும் போது சிவதொண்டன் நிலையச் சம்பந்தம் பூண்ட அன்பரில் ஒருவரையோ, இருவரையோ கூட்டிச் செல் வார். ஆருத்திரா தரிச னத்தை ஒட்டி ஆவுடையார் கோயிலில் மாணிக்கவாசக சுவாமிகளுக்குத் திருவிழா நடைபெறும்.

அத் திருவிழாவைப் பார்க்க ஓரன்பரையும் கூட் டிக் கொண்டு சென்றார். திருவிழா நள்ளிரவில் தொட ங்கும். விழாவில் மாணிக்க வாசக சுவாமிகளுக்குப் பெருமான் தீக்கை வைத்தா ளுவதே முதன்மையான நிகழ்ச்சி. அருச்சகரே மொட் டாக்கிட்டுப் பரமாசாரிய பாவ னையில் கிரியை புரிவார்.

இப்பூசை பார்த்து முடி வில் கூடிச் சென்ற அன்பரை நோக்கிச் செல்லத்துரை சுவாமிகள் உட்கார்ந்து கூற லானார் "பார்த்தீர்களா! யாழ்ப்பாணத்தில் இருப் பவரை". அன்பர் சுவாமிக ளின் அன்பு ததும்பும் முகத் தையே பார்த்த வண்ணம் வியந்து நின்றார்.

அம் முகம் யோக சுவாமிகளைப் பார்த்த அற் புதத்தையே உணர்த்திக் கொண்டிருந்தது. யோக சுவாமிகள் நல்லூரில் கண்ட குருமருந்தை "அப்பர்க்குச் சமணர் செய்து ஆபத்துத் தீர்த்து அப்பூதி அடிகள் பிள்ளைக்கு உயிர் கொடுத்த மருந்தாகவும்", "குருந்தமரத் தடியில் குருவாக வந்து கும்பிட்ட மாணிக்கவாச கர்க்குத் தீக்கை வைத் தாண்ட மருந்தாகவும்", "மார்க்கண்டருக்காக மற லியை உதைத்து மாயா மருந்தை அவர் தனக் காக ஈந்த மருந்தாகவும்" கண்டார்.

அக்குருமருந்து போலவே யோக குருவும் அன்றும் இன்றும் என்று முள்ள திருமருந்து.

**சிவதொண்டன் சபையார்**

# தபால் ஊழியர்களுக்கான விடுமுறைகள் இரத்து

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடையும் வரை அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறை களும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விடுமுறைகள் இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலானது எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இந்த நிலையில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளதாலேயே விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி தபால் நிலையத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் ஏப்ரல் 20 ஆம் திகதி விசேட வாக்காளர் அட்டை விநியோக நாளாகக் கருதப்படும்.

மேலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்குப்பதிவு எதிர் வரும் ஏப்ரல் மாதம் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடைபெற உள்ளது.

குறித்த நாட்களில் வாக்களிக்க முடியாத அரச பணியாளர்களுக்காக ஏப்ரல் 28 மற்றும் 29 ஆகிய திகதி மேலதிக நாட்களாக ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 09.03.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர். பாலகிருஸ்ணன் தணிகைவேள்**



அவர்களின் சிவபேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் 08.04.2025 நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 03.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும், அதனைத் தொடர்ந்து சபிண்டீகரண கிரியைகள் நடைபெற்று மதியம் 12.00 மணியளவில் நெல்லைமுருகன் திருமண மண்டபத்தில் (நெல்லியடி) நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

உடுப்பிட்டி வீதி, வதிரி,
கரவெட்டி.

((சி-2637)

தகவல்
குடும்பத்தினர்.
077 988 2160, 077 302 4218


# இராசிபலன்

07.04.2025
பங்குனி 24, திங்கட்கிழமை
தசமி பின்னிரவு 12.08 மணிவரை

பூசம் முற்பகல் 10.39 மணிவரை
சுபநேரம் 12.08-1.38 மணிவரை
இராகுகாலம் 7.38-9.08 மணிவரை
யோகர் சுவாமிகள் குருபூசை

சந்திராஷ்டமம்-மூலம், பூராடம்

**வளவன்**

**மேஷம்**: நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்**: ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலன் கிடைக்கும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள்.

**துலாம்**: ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்**: உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டில் ஆர்வம் காண வேண்டிய நாள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்**: வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரல ாம், எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு.

**கும்பம்**: ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்**: இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**கன்னி**: திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு**: திட்டமிட்ட காரியங்களில் சிறுதடை விவாதங்கள் ஏற்படலாம், பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மீனம்**: வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் எளி தில் பூர்த்தியாகும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கடந்துபோன நேரம் ஒருபோதும் திரும்பி வருவதில்லை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீமனோன்மணி அம்மன் கோவில்-நல்லூர் 07.04.2025 பங்குனித் திங்கள் நல்நாளில் கும்பாபிஷேகம் கண்டார் குவலயத்துயர்ந்து வாழ்வார்

**ஏழுலகும் தொழ எழுந்த மனோன்மணி**
**வேற்றுமை அற நின்றாள்.!**

**(திருமந்திரம்) (1061)**

**நின்றவள் நேரிமை நீண் கலை போடுற**
**என்றனன் அகம்படிந்தைழல குந் தொழில்**
**மன்றது வொன்றி மனோன்மணி மங்கலி**
**ஒன்றன்ன ஒன்று நின்று ஒத்தடைந்தானே**

எம் உலகத்தில் பொருந்தி ஏழ் உலகத்தில் உள்ளவரும் தொழ வந்திருந்தால். பொன்னம்பலத்திலே பொருந்தி உள்ள மனோன்மணி எனவும் நல்ல செல்வப்பேறு எல்லாம் தரும் மங்கலமாகும் . சிவம் வேறு, நாம் வேறு, அவள் வேறு பிரிந்து அறிய இயலாதபடி சிவ சக்தியாக ஒத்திருந்தாள் என திருமூலர் அடுத்த திருமந்திரத்தில் சிவப்பரம் பொருளைச் சேர்ந்து மகிழும் மனோன்மணி வழிபட்டு மனதுக்குள் வைக்கும் சித்துக்களை அடையும் மகிழ்ச்சி.

தினம் தினம் விளக்கு ஏற்ற தேங்காய் எண்ணை, பூக்கள், திருமுறைகள், அபிராமி அந்தாதி ஓதி துதிப்பவர்களுக்கு நற்கதி மேல் நிலை அளித்தருளுவார்.

**மனிதரும் முப்புரை! செப்புரை செய்யும் புணர்முலையால்**
**வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார் சடையோன்**
**அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை!**
**அம்புயமேல் திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே**

**அபிராமி அந்தாதி-5**

பர அபராணம் தரும் மனோன்மணியும் சிவபெருமானுண்டருளிய நஞ்சை அமுதாக்கிய உமையும் மனத்தை மேல் நோக்கி மேல் நிலைக்கு நமக்கு அருள் செய்து எழுப்புவாள் மனதில் சிந்தையில் தியானத்தில் இருப்பவர்களுக்கு கை கூடும்.

அளவட்டி வணக்கத்துக்குரிய வினாசித் தம்பி ஐயா ஓர் அருள்மிகு பாமாலை

**பாவ வினையைத் தீர்த்து அருள் புரியும் பரையே போற்றி**
**புவனம் எல்லாம் மறைந்த தமிழ்ப் பொருளே போற்றி**
**தவமுடையார் தமுக்கு இனிய தாயே போற்றி போற்றி**
**சிவசிவசொர்ணமணியே போற்றி போற்றி**

எங்களது வினையைத் தீர்த்து புவனம் எங்கும் இருப்பவராகிய தமிழ்ப் பொருளே தவமுடையவருக்கு இனிய தாயானவள் சிவனுடல் எங்கள் மனத்தினுள் இருக்கும் சொர்ண மனோன்மணியே வணக்கம்.

ஆகாசத்தில் இருந்து காற்று வியாக மந்திரங்களால் இறை சக்தி ஆற்றலை இறக்கி காற்றில் யாகசாலைக் குண்டத்தில் எரியும் யாகா அக்கினியில் இறக்கி இறைவனுக்கு உயர்ந்த உகந்த சமித்துப் பொருட்களை ஆகதி செய்து அங்கிருந்து கும்பத்தில் உள்ள நீரில் இறையாற்றலைக்குவித்து அந்த நீரால் பிம்பத்துக்கு அபிஷேகம் அதாவது கும்பித்துச் செய்யும் அபிஷேகம் கும்பாபிஷேகம் ஆகும்.

மனோன்மணி அம்பாள் கும்பாபிஷேகம் கண்டு தரிசித்து உதவி நின்ற ஆன்மாக்கள் யாவரும் பேரின்ப, பெருவாழ்வு பெறுவார்கள் என்பது நிலைமை.


07.04.2025 யோக சுவாமி குரு பூசை தினத்தில் ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம் நடைபெற குருவருளும் மனோண்மணி திருவருளும் கிடைக்க அம்பாளைப் பிரார்த்தித்து பேரின்ப வாழ்வு பெறுவோம்.



**க.கு.க.சிவபாலன்,**
**போசகர், ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**

(சி-2635)

# குருவருளும் திருவருளும்



"குரு பார்த்தால் கோடி நன்மை" என்பது சோதிட வாசகம் சோதிடம் வேதத்தில் உள்ள ஆறு அங்கங்களில் ஒன்று.

1. சிட்சை, 2.வியாகரணம், 3.நிருக்தம், 4.சோதிடம், 5.கற்பம், 6.சூத்திரம் என ஆறு அங்கங்கள்.

"அங்கமும் வேதமும் ஓதும் நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ"

என்ற திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய தேவார அடிகளால் அறியலாம். இலங்கைத் திருநாட்டில் ஞானியர் பரம்பரையில் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள், சுப்பிரமுனிய சுவாமிகள் எனப்பல ஞானியர் திருமூலநாயனார் திருவாய் மலர்ந்து அருளிய வண்ணம் எமது நாட்டைச் சிவபூமியாகப் பேணி வளம்படுத்தினர் எனலாம். இம்மண்ணுக்கு ஏற்பட்ட பல சோதனைகளையும் தீர்த்து அற்புதம் புரிந்தார்கள்.

செல்லப்பா சுவாமிகளை சற்குருவாகப் பெற்றவர் யோகர் சுவாமிகள். "என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்..." என்று தன்னைக் குருவருளால் தானறிந்தார் யோகர் சுவாமிகள். யோக நிலை கைவரப் பெற்றவராகையால் சதாசிவன் என்ற பெயரை உடையவர் யோகர் சுவாமிகள் என்ற காரணப்பெயரைப் பூண்டார். சுவாமிகள் மட்டக்களப்பு செங்கலடியிலும் யாழ்ப்பாணத்திலும் பல அன்பர்களின் உதவியுடன் "சிவதொண்டன் நிலையம்" என்ற இரு சைவ ஸ்தாபனங்களை நிறுவினார்.

யோகர் சுவாமிகள் தீர்க்கதரிசனத்துடன் உருவாக்கிய இவ்விரு நிலையங்களும் இன்றுவரை பல சிவதொண்டர்களை உருவாக்கியும், சிவதர்மத்தை நிலை நிறுத்துவதற்காகப் பல செயற்பாடுகளையும், ஆற்றி வருகின்றது. உதாரணமாக நூல் வெளியீடு, தியானம், அன்னதானம், பாதயாத்திரை, பண்ணிசை (திருமுறை) வகுப்பு, புரணபடலம், நித்திய திருமுறை ஓதல் ஆகிய சிவகைங்கரியங்களை குறிப்பாக குருபூசை என்பவற்றை ஒழுங்கு முறையாக நியதிகளின் படி வழிபாட்டு முறையாக செய்து வரும் சிவதொண்டன் நிலையம் தாளமேளம் இல்லாமல் விளம்பரம் இல்லாமல் குருவாக்கைப் பேணிச் செயலாற்றி வருவதை உலகமே அறியும்.

அகில இலங்கைத் திருமுறை மன்றம் பிரச்சினைக்குரிய காலப்பகுதியில் பிரச்சினை தீரவும், மக்கள் துன்பம் தீரவும் வேண்டி ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு திருமுறையை ஒவ்வொரு ஆலயங்களிலும் ஓதும் நியமத்தைப் பேணி நால்வர் திருவுருவங்களை அவ்வவ் ஆலயங்களில் எழுந்தருளச் செய்து திருமுறை ஓதிப் பூரணை தினத்தில் "அகத்தியர் தேவாரத்திரட்டு, முற்றோதல் செய்து வந்தது. பிரச்சினை ஓரளவு தீர்ந்து ஆலயம் தோறும் நால்வரை எழுந்தருளச் செய்வதிலும் குறித்த காலத்தில் திருமுறை ஓதுவதிலும் சில நடைமுறைச் சிக்கல் தோன்றியது. அப்போது திருமுறை மன்றத்துக்கு சிவதொண்டன் நிலையம் கைகொடுத்து உதவியது.

அமைப்பாளர் அமரர்.கிருஷ்ணமூர்த்தி, அப்போதைய தலைவர் அமரர். பண்டிதர் வ.பேரின்பநாயகம் ஆகியோர் முடிவெடுத்து நால்வரை சிவதொண்டன் நிலைய அரவணைப்புடன் அங்குள்ள திருமுறை மண்டபத்தில் எழுந்தருளச் செய்தனர். சிவதொண்டர் நிலையச் சீர் அடியவர்கள் மிகுந்த ஈடுபாடும், நித்திய பூசை நைவேத்தியம், நால்வர் குருபூசை, பௌர்ணமிப் பூசை என்பவற்றிலும் பெரும் ஈடுபாடு உடையவர்களாக திருமுறைக்குப் பெருமதிப்புக் கொடுத்து இன்றுவரை செயற்படுகின்றனர். இது குருவருள் என்றே கூறலாம். பங்குனித் திங்களில் இடம்பெறும் யோகர் சுவாமிகளின் குருபூசை ஆயிலிய நட்சத்திரம் கூடும் நன்நாளில் வெகுவிமரிசையாக, பக்திபூர்வமாக இடம்பெறுவது குருபூசையின் மகத்துவத்தைக் காட்டுகிறது. இதில் பல நூற்றுக்கணக்கான சிவதொண்டர்கள், சைவ அபிமாணிகள் கலந்து சிறப்பிப்பர். திருமுறை மன்றத்தினரும் சுவாமிகளின் குருபூசையில் கலந்து கொள்வது திருவருள் செயலேயாகும். 24.03.2025 அன்று மாலை திருவடிக்கு விசேட பூசை, வழிபாடுகள் இடம்பெற்றன. எதிர்வரும் 07.04.2025 இன்று இடம்பெற இருக்கும் குருபூசைக்கு முன்பாக நற்சிந்தனை முற்றோதல், சிவசிந்தனை முற்றோதல் என்பன இடம்பெறும். தேவாரத்தைப் பண்ணுடன் பயிற்றுவதில் வல்லரான ஓதுவார் பண்ணிசை மணி திரு. K.S.R திருஞானசம்பந்தர் அவர்கள் நெறிப்படுத்தலில் இலவசமாகச் சனி, ஞாயிறு ஆகிய இருநாட்களும் மாலை 4 மணிக்கு பண்ணுடன் சிவதொண்டன் நிலையத் திருமுறை மண்டபத்தில் பயிற்றுவிக்கப்படுகின்றது. அவரிடம் பயின்ற பலர் இன்று பல தலங்களிலும் ஓதுவார்களாச் சிறப்பாகப் பணிபுரிவது பாராட்டுக்குரியது. பல மாணவர்கள் பண்ணிசை ஆசிரியர்களாகவும் செயற்படுகின்றனர். மேற்கூறிய செயற்பாட்டைச் சிவதொண்டன் நிலைய அனுசரணையுடன் அவர் செய்வது திருமுறை மன்றத்துக்குப் பேருதவியாகும்.

சைவச் சிறார்களும், பெரியோர்களும் இவ்வகுப்பில் கலந்து தம்மை வளப்படுத்திக்கொள்ளலாம். "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பது பழமொழி திருமுறை மன்றத் தலைவர் கலாநிதி திரு.ஏ.அனுசாந்தன் அவர்கள் கடந்த சிலவாரத்துக்கு முன் இடம்பெற்ற வல்வெட்டித்துறை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர ஆலய குடமுழுக்கில் ஓதுவராகவும் எமது மன்ற மூத்த உறுப்பினர் திரு.கே.தவராசா அவர்கள் ஓதுவாராக மலேசியா முருகன் ஆலயத்துக்கு அழைக்கப்பெற்றது எமது மன்றத்துக்கு வழங்கப்பெற்ற பெரிய அங்கீகாரம் ஆகும். அவர் இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் சிறந்த ஓதுவார் ஆகக் கணிக்கப்பெற்றுப் பாராட்டப் பெற்றார். எமது மன்றப் பொருளாளர் க.கு.க சிவபாலன் அவர்கள் யாழ்.வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர ஆலயத்திலும், அதன் பரிவாரக் கோயில்களிலும் நித்திய நைமித்தியப் பூசைகளில் ஓதுவராகக் செயற்படுகின்றார். மேலும் எமது மன்ற உறுப்பினர்கள் திரு.பாலசுப்பிரமணியம், திரு.சீ.நாகேந்திரமூர்த்தி போன்றவர்களும், ஓதுவார்களாகவும் ஆலயங்கள் தோறும் இடம்பெறும் திருவாசக முற்றோதல் என்பவற்றிலும் புராண படலங்களிலும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

இச்சிறப்புக்கள் குருவருள் திறத்தால் அன்றி எம் செயல் ஏதும் இல்லை. எமது தொல்வினை சுருங்க, வெவ்வினையை வேரறுக்கத் திருமுறைகளை ஓதுவோம். குருவணக்கம் செய்வோம். இம்மாதம் இடம்பெற இருக்கும் தவத்திரு யோகர் சுவாமிகள் குருபூசையில் நாமும் பங்குபற்றித் திருவருளுக்குப் பாத்திரமாவோம்.

யோகர் சுவாமிகள் 1925 ஆம் ஆண்டளவில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயம் முன்றலில் திருவிழா நாளில் வந்து தரிசித்தார். அன்றையதினம் கொடியேற்றத் திருவிழா ஆலயப் பாதுகாவலர் துரையப்பா, மாசிலாமாணி காலங்களிலும் இந்தியா உத்தர கோச மங்கை ஆலயத்தில் இருந்து வந்த சிவயீ சரவணக் குருக்கள் தமது கிரிகைகளைச் சிறப்புடன் பயபக்தியுடன் செய்வதனையும் சுவாமிகள் அங்கு நிற்பதையும் ஓர் தொண்டர் குருக்கள் ஐயாவிடம் அறிவிக்க, அவர் வந்து திருநீரும் கொடுத்து இன்முகத்துடன் சுவாமிகளை வணாங்கவும் அவர் சிறப்பாக திருவிழா செய்வதாகவும் அத்துடன் உம்மை மறந்த நிலையில் கொடியேற்றியதாகவும் அருளாசியாக திருவாய் மலர்ந்தார். திரும்ப வரும் போது இலுப்பை மரத்தடியில் நின்ற துரையப்பா அவர்களை அழைத்து இது ஒரு கோயிலடா உள்ளுக்கு ஒரு பூச்சி இருக்கிறது அதைக் கூத்துக்கொட்டகையாக்கி விடாதே என கூறியதை நாம் ஒவ்வொருவரும் நினைவில் இருத்தி ஆலயக் கும்பாபிஷேகம் நடைபெற்று திருவிழா நடைபெற வேண்டும் என திருமுறைகளை ஓதிப்பிரார்த்திப்போம்.

எமது மன்றச் செயலாளர் S.பாலச்சந்திரன் தினமும் சிவதொண்டன் நிலையத்தில் திருமுறைகள், புராணப்பாடல்கள், குருபூசைகளிலும், சிவசிந்தனை முற்றோதலிலும், காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயத்தில் ஒவ்வொரு மாதம் மகநட்சத்திரத்தில் திருவாசக முற்றோதலிலும் நாச்சியம்மன் கோவில் ஓதுவராகவும் இன்றும் பல ஆலயங்களிலும் திருமுறைகளை சிறப்புடன் ஓதுபவர்.

பாடுவோம்! பரவுவோம்! பணிவோம்! மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

**அகில இலங்கைத் திருமன்றம்,**
**திருமுறை ஓதும் அன்பர்கள்**

(சி-2635)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையிட வேண்டாம்!

# ட்ரம்பிற்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் குதித்த அமெரிக்க மக்கள்

(வோஷிங்டன்)

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு எதிராக அமெரிக்காவின் பல நகரங்களில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பெருமளவு மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.**




ட்ரம்ப் நாட்டை நிர்வகிக்கும் முறை குறித்து சீற்றமடைந்துள்ள மக்களே இந்த ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அமெரிக்காவில் இடம்பெற்ற மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்கள் இவை என சர்வதேச ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

"தலையிட வேண்டாம்" என்ற கோரிக்கைகளுடன் இந்த ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்காவின் 50 மாநிலங்களில் 1200 இடங்களில் ட்ரம்பிற்கு எதிராக இடம்பெற்றன.

சிவில் உரிமை அமைப்புகள், தொழிற்சங்கங்கள் உட்பட 150 இற்கும் மேற்பட்ட குழுக்கள் இதில் கலந்து கொண்டன என தெரிவித்துள்ளது.

அரசாங்க ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குவது, சமூக பாதுகாப்பு நிர்வாக அலுவலகங்களை மூடுவது, குடியேற்றவாசிகளை நாடு கடத்துவது, திருநங்கைகளிற்கான பாதுகாப்பை அகற்றுவது, சுகாதாரப் பாதுகாப்பு திட்டங்களை குறைப்பது போன்ற ட்ரம்ப் நிர்வாகத்தின் நடவடிக்கைகள் குறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் சீற்றம் வெளியிட்டுள்ளனர்.

வோஷிங்டனிலும் புளோரிடாவிலும் சுமார் 50,000 மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு விதமான பதாகைகளையும் உக்ரைனின் கொடியையும் ஏந்தியிருந்தனர். உக்ரைன் மீது போர் தொடுத்த ரஷ்யாவுடன் உறவுகளை வலுப்படுத்துவதற்கு ட்ரம்ப் நிர்வாகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காகவே உக்ரைன் கொடிகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

தங்களுடைய இந்த ஆர்ப்பாட்டங்கள், ஏனையவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உந்துதலை வெளிப்படுத்தும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்: மகம்
கிபா-40
உயரம்:5' 4"
தகைமை/தொழில்:O/L, அலுவலக உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15296

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:அனுசம்
உயரம்:6"
தகைமை/தொழில்: O/L, PVT
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15297

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:சுவாதி 2 இல் செவ்
உயரம்:5' 5"
தகைமை/தொழில்:கடை(லண்டன்)
எதிர்பார்ப்பு:படித்த மணமகள்
தொ.இ: B/15299

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:1996 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா:36 3/4
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்:Software Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/11392

பிறப்பு-1990 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 30 7 இல் செவ்
உயரம்:5' 6"
தகைமை/தொழில்:BA,DO
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/13551

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா:32
உயரம்:5' 4"
தகைமை/தொழில்:BSc, MPhil in Chemistry
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ: G/13552

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## ஏமன் மீது தாக்குதல்; ட்ரம்ப் பகிர்ந்த வீடியோ


(வோஷிங்டன்)

ஏமனில் இயங்கி வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீதான அமெரிக்க தாக்குதலின் வீடியோவை அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் பகிர்ந்துள்ளார். எக்ஸ் வலைத்தளத்தில் அவர் பகிர்ந்துள்ள வீடியோவில், சுற்றி நிற்கும் ஒரு மக்கள் குழுவின் மீது ட்ரோன் மூலம் குண்டு வீசப்பட்டு அவர்கள் கொல்லப்படுவதும் பின்னர் அப்பகுதி முழுவதும் புகை பரவியதும் பதிவாகியுள்ளது.


இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஹவுதி படையினர் எனக் குறிப்பிட்ட ட்ரம்ப், அவர்கள் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தும் கட்டளைகளுக்காக அங்கு கூடியிருந்ததாகத் தெரிவித்துள்ளார். மேலும், "ஐயோ, இனி இந்த ஹவுதிகளினால் நமது கப்பல்கள் மீது எந்தவொரு தாக்குதலும் இருக்காது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

காசா மீதான இஸ்ரேல் தாக்குதலை எதிர்த்து இஸ்ரேல் மற்றும் அமெரிக்க வணிக மற்றும் இராணுவ கப்பல்கள் மீது ஹவுதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதும் கடந்த வாரம் அமெரிக்கா நடத்திய தாக்குதல்களில் ஏராளமான ஏமன் மக்கள் கொல்லப்பட்டதாக ஹவுதி கிளர்ச்சிப் படை குற்றம்சாட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (நி-8)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.வைகுந்தநாதன் காகுந்தன் B.F.A (Hons)
பட்டப்பின் கல்வி டிப்ளோமா (P.G.D.E)



திரு.பஞ்சாட்சரம் சுரேன் N.D.T (com)
வியாபார முகாமைத்துவ இளமாணி (B.B.M)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற இரு ஆசிரிய உறவுகளையும் மேலும் உயர்வுகள் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-2634)

வாழ்த்துவோர்:- ஆசிரிய நட்புறவுக் கழகம், யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கானை அருள்மிகு மாவடி ஞான
# மஹா கும்பாபிஷேக



## அருளாசிச் செய்தி

யாழ் மாவட்டம். சங்கானை. மாவடிப்பதியில் வீற்றிருந்து அருளாட்சி நல்கும் ஞான வைரவப் பெருமானின் திருத்தலம் கும்பாபிஷேகம் காணவிருப்பது நம் தவப்பேறன்றி வேறில்லை. இம்மைக்கும் மறுமைக்கும் அவன் துணையன்றி வேறில்லை. நல்லதோர் கைங்கரியத்தை முன்னெடுக்கும் அடியவர்களை வாழ்த்தி. இந்நன்னாளிலே வெளிவருகின்ற சிறப்பு மலர் வெளியீடு இனிதே சிறப்புற இறையாசி வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**



## பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை

அருள் தெய்வமாம் வைரவப் பெருமானின் ஆலயம் காண்போர் வியக்கும் வகையில் அழகுத திருக் கோயிலாக மெய் சிலிர்க்கும் வகையில் நிறைந்த கலையம் சங்களுடனும் நல்லதோர் வர்ணத் தோற்றமாக வருவோர் மனம் இலகுவில் வைரவர் பாதம் சரணாகதியடையும் வகையில் அற்புதமாக அமைந்துள்ளது. இவ் திருப்பணிகளும் கும்பாபிஷேகமும் சிறப்பாக அமையப் பெறுவதற்கு காரணம் இவ்வூர் அடியார்கள் வைரவர் மீது கொண்டுள்ள அளவில்லாத பக்தி உணர்வுதான்.

வைரவப் பெருமான் பணிக்கு கிராமத்தவர்களும். பரிபாலன சபையினரும் தம்மை அர்ப்பணித்து பாடுபட்டு தொண்டாற்றியவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இவர்களுக்கு வைரவப் பெருமானின் திருவருள் நிறைவாக கிடைக்கட்டும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எனது ஆலோசனை களையும். வழிகாட்டல்களையும் அனுசரித்து பாகுபாடின்றி தமக்குள் ஒருவராக என்னையும் சேர்த்து பணிகளை திறமையாக செய்தமை மிகமிக பாராட்டுதற்குரியது. வைரவரினது அடியவர்கள். உபயகாரர்கள். தர்ம வள்ளல்கள் என அத்தனை வைரவப் பெருமான் அடியவர்கள், சிற்ப கலாநிதிகள். வர்ண வேலையாளர்கள். மங்கள வாத்தியக் கலைஞர்கள். ஒளி ஒலி அமைப்பாளர்கள். யாக அமைப்பாளர்கள் அனைவருக்கும் வைரவப் பெருமான் கும்பாபிஷேக அருள் கிடைத்து சகலயோகம் மிக்க நல்வாழ் வை பெறவும் இம்மலர் நன்றாக மலர்ந்து உலகம் எங்கும் பரவ வைரவர் பாதம் பணிந்து ஆசிர்வதிக்கின்றேன்.

**வேதாகம சாதக சக்கரவர்த்தி, வைதீக சாகரம்,**
**சதமஹோற்சவர், சிவாகம கிரியாத்துவநிதி, சிவஸ்ரீ**
**ச.மு.பாஸ்கர ரவிக்குருக்கள் அராலி மத்தி உலோலை இட்டி**
**சித்தி விநாயகர் தேவஸ்தானம்**



## சங்கானை மாவடி ஞான வைரவர் தேவஸ்தான குருவின் ஆசிச்செய்தி

கலையும். கலாசாரமும். விழுமியத்தையும் பேணிப் பாதுகாத்து சைவநெறிமுறை அனுட்டானங்களை முறைப்படி பின்பற்றி வாழும் எம் பெருமான் அடியவர்களால் நிறையப்பெற்ற சங்கானைப் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மாவடி ஞான வைரவரை அனுதினமும் பூஜிக்கின்ற பாக்கியத்தை பெரும் பேறாக கருதி. இப் பிரதேச வாழ் மூதாதையருடைய சிந்தனைகள். சந்ததி வழியாக பெறப்பட்ட கருத்துக்கள். அனுபவப் பகிர்வு. அடையாளச்சின்னங்கள். வெளியிடப்பட்ட வெளியீடுகள் என்பவற்றை தாங்கி மலரவிருக்கும் மகா கும்பாபிஷேக மலரிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் ஆலய வழிபாட்டை ஒழுங்குபடுத்தி. வளர்ந்துவரும் சிறார்களின் ஆன்மீக நாட்டத்தை மேம்படுத்தி கூட்டுப்பிரார்த்தனை. ஆன்மீக சொற்பொழிவு அறநெறிக்கல்வி போன்றவற்றையும் மேற்கொண்டு இந்து சமய பண்பாட்டை மேலோங்கச் செய்ய ஞான வைரவர் பாதம் பணிந்து பணிபுரிவோமாக! இக் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் வைரவப் பெருமான் திருவருள் கிடைக்கப்பெற்று பேரானந்தப் பெருவாழ்வு கிடைக்க வைரவரின் பாதக்கமலங்களை பிரார்த்தித்து எனது பரிபூரணமான ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தேவஸ்தான குரு, பிரம்ம ஸ்ரீ அ.சுதர்சனசர்மா**
**சங்கானை மாவடி ஞான வைரவர் தேவஸ்தானம்**

## திருப்பணிச்சபை செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற கூற்றுகளுக்கு அமைவாக எமது பகுதியில் எல்லைகள் தோறும் ஞான வைரவர் எழுந்தருளியிருந்து எம்மைக் காத்து இரட்சித்து வருகின்றார். அவரின் பெருங்கருணையினால் எல்லா வளங்களும் பெற்று எமது சமூகம் வாழ்ந்து வருகின்றமை கண்கூடான விடயம் கடவுளின் திருவடிகளை அடைவதற்காகவே நாம் பிறவி எடுத்தோம். அத் திருவடிகளை சிந்தித்தலும் துதித்தலும் வணங்குதலுமே நமது முக்கியமான கடமையாகும்.

இன்று கும்பாபிஷேகம் காணும் ஞான வைரவப் பெருமான் புதுப் பொலிவுடன் பல அன்பர்களின் திருப்பணிகள் மூலம் மெருகூட்டப்பட்டு காட்சியளிக்கின்றார் என்பது உண்மையில் அடியார்களின் உள்ளக்கிடக்கையாகும். அந்தவகையில் எல்லாம் வல்ல மாவடி ஞான வைரவப்பெருமான் எல்லா உள்ளங்களிலும் புகுந்து பக்தி பெருக்கில் எண் ஊன் உருக அந்த பரவசத்தில் உள்ளே உடல் உருக என்ற பாடல் வரிக்கேற்ப சமய விழுமியங்களுடன் கூடிய பண்பாட்டு சமூகமாக எமது சமூகம் வளர துணை நிற்க வேண்டி அமைகின்றேன்.

**செயலாளர், திருப்பணிச்சபை,**
**மாவடி ஞான வைரவர் தேவஸ்தானம்.**

## இந்து இளைஞர் மன்றத்தின் வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ் மண்ணில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சங்கானை மாவடி ஞானவைரவப் பெருமானிற்கு 07.04.2025 திங்கட்கிழமை காலை 09.30 முதல் 10.30 வரையான சுப வேளையில் நடைபெற்ற மஹா கும்பாபிஷேக பெருவிழாவிற்கு வாழ்த்துரைப்பதில் உள்ளத்தால் உவகை அடைகிறோம். சங்கானை மாவடி ஞானவைரவப் பெருமான் எமது ஊர் மக்களின் குல தெய்வமாக. காவல் தெய்வமாக இருந்து எமக்கு வேண்டிய நிறைவான அருளை தந்து அடியவராகிய எம்மை வாழ்வில் செழுமைப்படுத்தி நிறைவான ஒரு மனிதர்களாக. எடுத்துக் காட்டான ஒரு சமுதாயக் கட்டமைப்புக் கொண்ட ஒரு சமூகக் குழுவாக எம்மை வழிநடாத்தி வருகின்றமை அடியவர்கள் யாவரும் தம் அனுபவமூடாகக் கண்டுகொண்ட ஒரு உண்மையாகும்.

பொதுவாக இத்தனை பெரியளவிலான வைரவர் ஆலயங்களை அமைக்கப்படுவது அரிதான ஒரு செயலாகும் அத்துடன் மூர்த்தி. தலம். தீர்த்த சிறப்புடன் அமைந்துள்ளமை சிறப்பிற்குரியது ஆலயத்திலே நித்திய. நைமித்திய பூசைகள் மற்றும் சிவராத்திரி. நவராத்திரி. ஆவணி ஓணம். விநாயகர் சதுர்த்தி. கந்தசஷ்டி. மாதாந்த பரணி உற்சவம். அலங்காரத் திருவிழா போன்ற பலதரப்பட்ட விழாக்கள் சிறப்பாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலயப் பணிகளை தொடர்ந்து சிறப்பாக இயக்குவதற்கும் இந்து இளைஞர்களாகிய எங்களது பங்களிப்பு எப்போதும் காத்திரமாக அமையும் எனவும் கூறி வாழ்த்தி இந் நூலை வரவேற்கின்றோம்.

**மாவடி இந்து இளைஞர் மன்றம்.**
**சங்கானை.**

## ஆலய வர

யாழ்ப்பாணம். வலிகாமம் மேற்கு சங்கானையில் திருவருள் மிகு
அருள் ஆட்சிபுரிந்து வருகின்றார். பன்னெடுங் காலங்களுக்கு முன் வ
நிலத்தில் தோன்றியவர் தான் மாவடி வைரவப் பெருமான். அந்ந
கட்டுவதற்கு வயல்ப் பக்கமாக சென்ற வேளை அவரது காலில் ஒரு
வாழ்ந்த சில அடியவர்களை அழைத்து வந்து அந்நிலத்தை தோ
ஒன்று கிடைத்தது. அவ்வூர் மக்கள் அந்த இடத்தில் ஒரு ஓலைக்
வரலாயினர். அந்த வைரவர் சூலம் தான் இன்றும் எமது ஆலயத்தி
சூலமாகும். கிட்டத்தட்ட 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த இச் சூலத்
எழுந்தருளச் செய்து பொங்கல் பூஜைகள் செய்து வந்தனர். பின் நாளில்
மகா மண்டபத்துடன் கூடிய சிற்றாலயமாக ஊர் மக்கள் அமைத்
கும்பாபிஷேகம் மாவடி வைரவர் பெருமானுக்கு நிகழ்ந்தது.

பின்னர் காலப்போக்கில் அவ்வூரில் வாழ்ந்த அடியார்கள் ஆல
தனிப்பட்ட ஒருவரின் காணியை அவ் அடியவருக்கு வழங்கி ஆலயத்

இவ்வாலயம் அடியார்களின் அயராத உழைப்பினாலும். செல்வந்த
இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேலும் பல மண்ட
வெளிவீதிகளை அமைத்து 1998 ஆம் ஆண்டு மூன்றாவது கும்பாபி
மண்டபங்களுடன் கூடிய சுற்றுப் பிரகாரம் ஓடுகளினால் வேயப்பெற்று
நடைபெற்றது.

இன்று மேலும் பல அலங்கார சிற்ப வேலைகளுடன் கூடிய
புதுப்பொலிவுடன் இவ்வாண்டு 07.04.2025 இல் ஐந்தாவது கும்பா
நாம் காணும் அழகிய திருக்கோயிலாக பூலோக கைலாயமாக காட்
அருளும் இவ்வூர் அடியவர்களின் நிதிப்பங்களிப்பு. வெளிநாடுகளில்
ஆகும்.

இத் திருக்கோயிலை செவ்வனே வடிவமைத்த தென்னிந்திய சிற
சிற்பக் கலைஞர்களும் சேர்ந்து அவர்களின் கைவண்ணத்தி
காட்சியளிக்கின்றது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் இவ்வாலயத்தின்
ரவிக்குருக்களினால் நிறைவேறியது வைரவப்பெருமானின் அருே
காட்சியாக அமைத்து தந்த சிற்பக்கலைஞர்கள். வர்ணபூச்சுக் கலைஞர்
செய்தவர்களையும். கும்பாபிஷேக நாட்களில் மங்கள இசை வழங்
கும்பாபிஷேகம் சிறப்புற பங்களிப்பு செய்த அடியார்கள். தொண்டர்கள் அ
நன்றி கூறுவதுடன் வைரவப் பெருமானின் நல்லாசிகள் கிடைக்க பி

நன்றி

**கிரியைகள் ஆரம்பம் : 03.04.2025 வியாழக்கிழ**
**எண்ணெய்க்காப்பு : 05.04.2025, 06.04.2025 சனி**
**ஞாயிற்றுக்கிழமை மால**
**கும்பாபிஷேகம்: 07.04.2025 திங்கட்கிழமை க**

வைரவப் பெருமான் மெய்யடியார்களே இந்து மகா சமுத்திரத்தின்
திருநாட்டின் வடமேற்கு திசையில் சைவப் பாரம்பரியமும் தமிழ் உண
வாழும் சங்கானை மாவடி பகுதியில் கோவில் கொண்டு அருள்பாளித்து
அமையும் சாமுண்டேஸ்வரிக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும்
மாதம் 24 ஆம் நாள் 07.04.2025 திங்கட்கிழமை தசமித்தியும் பூச
முதல் 10:30 மணிவரை உள்ள இடபலக்ன சுப முகூர்த்த வேளையில்
மகா கும்பாபிஷேகம் நடைபெற எம்பெருமான் அருள்பாலித்துள்ளார் அ
வழிபாட்டில் அனைவரும் வருகை தந்து தரிசித்துக் கொள்ளும் வண்ண

07.04.2025 திங்கட்கிழமை பங்குனி 24 ம் நாள் காலை
பூசை. மகாபூர்ணாகுதி. தீபாராதனை. அந்தர்பலி. பகிர்பலி.
பாராயணம். மூர்த்திகும்பங்கள் எழுந்தருளுதல். தூபிகள் கும்பா
அபிஷேகம். கோபூசை. தசதர்சணம். அருளாசி உரைகள். குரு

**பிரதிஷ்டா குருமார் வி**

சர்வபோதகாசிரியர்: சகலாகம சங்கிரகர் சதமஹே
சிவஸ்ரீ.நா.சர்வேஸ்வரக்குருக்கள் கதிரமலை சி

வைதீகசாகரம் சதமஹோற்சவர் வேதாகம சாதக சக்கிரவ
லோலைசிட்டி விநாயகர் தேவஸ்தானம் அரா

சுதர்சன் சர்மா சங்கானை மாவடி ஞான

**அருளாசியுரை: வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசு**
**சுவாமிகள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முத**
**தவத்திரு வேலன் சுவாமிகள், ஆதீன முதல்வர், சிவகுரு**
**கலாநிதி ஆறு.திருமுருகன் தலைவர் சிவபூமி அறச்**

**கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர் :**

KULEN DRIVING SCHOOL KDS DS.1043 Main Street, Chankanai.

குலேன் சாரதி பயிற்சிப் பாடசாலை
KULEN DRIVING TRAINING SCHOOL
DS.1043 பிரதான வீதி, சங்கானை. TP: 0772719735, 0768906330

L

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ன வைரவப் பெருமான் தேவஸ்தானம்

# ஷகம் - 07.04.2025

## ய வரலாறு

யில் திருவருள் மிகு மாவடி ஞான வைரவப் பெருமான் அடியார்களுக்கு. லங்களுக்கு முன் வயலும் வயல் சூழ்ந்த இயற்கை வளம் மிக்க மருத பெருமான். அந்நாளில் அவ்வூரில் வாழ்ந்த அடியார் ஒருவர் மாடு அவரது காலில் ஒரு உருவம் தட்டுப்பட்டது. அவர் உடனே அவ்வூரில் அந்நிலத்தை தோண்டிப் பார்த்த போது வெண்கல வைரவர் சூலம் த்தில் ஒரு ஓலைக் குடிசையில் அவ் சூலத்தை வைத்து வணங்கி ம் எமது ஆலயத்தில் காணப்படும் மிக தொன்மை வாய்ந்த வைரவர் வாய்ந்த இச் சூலத்தை அவ்வூர் மக்கள் முதன் முதலில் மடாலயத்தில் ந்தனர். பின் நாளில் பொலிகற்களினால் கற்பக்கிரகம். அர்த்த மண்டபம். ர் மக்கள் அமைத்து முதன் முதலில் 1958 ஆம் ஆண்டு முதல் நிகழ்ந்தது.

த அடியார்கள் ஆலயத்தை மேலும் விஸ்தரித்து கோயில் நிலத்தை க்கு வழங்கி ஆலயத்தை பெரியளவில் அமைத்தனர்.

பினாலும். செல்வந்தர்களின் நிதிப் பங்களிப்பினாலும் 1978 ஆம் ஆண்டு மேலும் பல மண்டபங்களுடன் கூடிய வசந்தமண்டபம். உள்வீதி. மூன்றாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் ஆலயத்தில் வில்லு னால் வேயப்பெற்று 2013 ஆம் ஆண்டு நான்காவது கும்பாபிஷேகமும்

லகளுடன் கூடிய உள்வீதி. வெளிவீதி மண்டபங்கள் நிறுவப்பட்டு ல் ஐந்தாவது கும்பாபிஷேகம் நிகழ திருவருள் பாலித்துள்ளது. இன்று கைலாயமாக காட்சி அளிப்பதற்கு காரணம் வைரவப் பெருமானின் பு. வெளிநாடுகளில் வாழும் எமது சொந்தங்களின் நிதிப்பங்களிப்புமே

த்த தென்னிந்திய சிற்பக் கலைஞர்களும். அராலியூரில் வதியும் நமது ர் கைவண்ணத்தில் இவ்வாலயம் புதுப்பொலிவுடன் தற்போது

ம் இவ்வாலயத்தின் மூன்று கும்பாவிஷேகங்களை சிவஸ்ரீ ச.மு.பாஸ்கர பெருமானின் அருளே ஆகும். இவ்வாலயத்தை மிகவும் கண்கவரும் ணபூச்சுக் கலைஞர்களையும். மற்றும் மின் இணைப்பு வேலைகளை ங்கள இசை வழங்குகின்ற தவில் நாதஸ்வர வித்துவான்களையும். கள். தொண்டர்கள் அனைவருக்கும் பரிபாலன சபையினராகிய நாங்கள் மாசிகள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

-ஆலய பரிபாலன சபை-

**5 வியாழக்கிழமை. சூரிய உதயம் 06.12 மணிமுதல்.**
**6.04.2025 சனிக்கிழமை சூரிய உதயம் 06.12 முதல்**
**க்கிழமை மாலைவரை.**
**ங்கட்கிழமை காலை 09.30. முதல் 10.30 வரை.**

மகா சமுத்திரத்தின் தர்மபூமி சிவபூமி எனவும் போற்றப்படும் இலங்கை ரியமும் தமிழ் உணர்வும் தர்மசீலமும் மிகுந்த பெருமக்கள் பூர்வீகமாக ண்டு அருள்பாளித்து வரும் வைரவ பெருமானுக்கு நூதன மூர்த்தியாக ர மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான குரோதி வருடம் பங்குனி ம தசமித்திதியும் பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9.30 கூர்த்த வேளையில் விநாயகர் முதலான பரிவார மூர்த்திகள் சகிதமாக நள்பாலித்துள்ளார் அத்தருணமும் அதன் முன்பின் நிகழும் இத்தெய்வீக கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

24 ம் நாள் காலை 6.00 மணிமுதல் விநாயக வழிபாடு. யாக தர்பலி. பகிர்பலி. வேத. தோத்திர. நிருத்ததாள கீத திருமுறை ல். தூபிகள் கும்பாபிஷேகம். மஹாகும்பாபிஷேகம். கர்ப்பாவரன சி உரைகள். குருமார் சம்பாவணை முதலியன.

| |
|---|
| **திஷ்டா குருமார் விபரம்** |
| சங்கிரகர் சதமஹோற்சவர். முத்தமிழ் குருமணி கள் கதிரமலை சிவன் தேவஸ்தானம் சுன்னாகம் |
| ம சாதக சக்கிரவர்த்தி சிவஸ்ரீ.மு.பாஸ்காரரவிக்குருக்கள் தவஸ்தானம் அராலி மத்தி. வட்டுக்கோட்டை |
| ன மாவடி ஞானவைரவர் தேவஸ்தானம் |

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ந்தர் ஆதீன முதல்வர், 2 வது குருமகா சந்நிதானம். தல்வர், சிவகுரு ஆதீனம் நல்லூர். செஞ்சொற் செல்வர் ர் சிவபூமி அறக்கட்டளை. கம்பவாரிதி இ.ஜெயராஜ்**



## செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி

சங்கானை அருள்மிகு ஞானவைரவர் கோவில் கும்பாபிஷேகம் குறித்து பக்தர்களுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் ஆனந்தமடைகின்றேன். இத் திருக்கோயிலின் சிறப்பை நான் நன்கு அறிவேன்.

30 ஆண்டுகளுக்கு முன் இவ்வாலயத்தில் தொடர் விரிவுரைகளை ஆற்றியதனால் ஆலய வளர்ச்சியை அறியும் சந்தர்ப்பம் கிட்டியது. அற்புதம் நிறைந்த மாவடி வைரவரின் திருவருளால் ஆலயம் குறுகிய காலத்தில் பெரு வளர்ச்சியடைந்து மிளிர்கிறது. ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கு சமயச் சொற்பொழிவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த இவ்வாலயம். சிறுவர்களின் அறநெறிக் கல்விக்கும் தொடர்ந்து அக்கறை காட்டி வருவது பாராட்டுக்குரியது. சீர் நிறைந்த சங்கானைத் திருவூர் சைவப் பண்பாட்டு பாரம்பரியங்கள் சிறக்க மாவடி ஞானவைரவர் ஆலய வளர்ச்சி பெருந்துணை புரியும் என்பதில் ஐயமில்லை. காவல் நாயகனாக விளங்கும் வைரவப் பெருமான் அனைவரையும் காத்தருள வேண்டி அமைகின்றேன்.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன்,**
**தலைவர், தெல்லிப்பளை**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.**



## பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஆகம முறைப்படி அமைக்கப்படும் ஒவ்வொரு இந்து ஆலயமும் பன்னிரெண்டு ஆண்டிற்கு ஒருமுறை புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்வது ஆகம விதியாகும். அந்த வகையில் நூற்றாண்டு கடந்த இவ்வாலயமும் இவ்வாண்டு குடமுழுக்கு பெருவிழாவினை காண்கிறது. ஆலய திருப்பணி வேலைகள் என்பது வெறுமனே வார்த்தைகளால் கூறிவிடக்கூடிய ஒன்றல்ல. அந்த வகையில் இவ் ஆலயத்தின் வளர்ச்சியிலே பெரும் பங்காற்றி வரும் ஆலய பரிபாலன சபையினர் தமது அயராத உழைப்பின் மூலம் இன்று இவ்விழாவினை சிறப்புற ஒழுங்கு படுத்தியுள்ளனர்.

இந்நன்னாளில் அடியவர்களின் வாழ்வில் இன்னல்கள் நீங்கி அறநெறி மிக்க சமுதாயத்தை உருவாக்குவதற்கான ஆற்றலை அருளும் வகையில் எல்லாம் வல்ல ஞானவைரவர் ஆசியை வேண்டுவதுடன் இக் கும்பாபிஷேகத்தை முன்னெடுக்கும் ஆலய அறங்காவலர் சபை. அந்தண சிவாச்சாரியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. கவிதா உதயகுமார்,**
**பிரதேச செயலாளர், வலிமேற்கு, சங்கானை.**



## சிவகுரு ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஈழத்திருநாட்டில் வடபால் அமைந்துள்ள யாழ் குடாநாட்டின் வலிகாமப் பிரதேசத்தில் ஆலயங் கள் சூழ உள்ள சங்கானை மாவடிப்பகுதியில் எழுந்தருளி அருளாட்சி செய்யும் அருள்மிகு ஞானவைரவப் பெருமானின் ஆலயத்தைப் புனரமைத்து மகாகும்பாபிஷேகம் செய்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அதி சூக்குமமான இறைவனை தியானம். ஆவாகனம் முதலிய செயற்பாடுகள் ஊடாக ஆகாயம் (வெளி), காற்று. நெருப்பு. நீர். நிலம் ஆகிய பஞ்சபூத தத்து வங்களூடாக விக்கிரகங்களில் பிரதிஸ்டை செய்தல் மகாகும்பாபிஷேக கிரியை ஆகும். ஒட்டுமொத்த பிரபஞ்ச சக்திகளையும் ஒன்றிணைக்கும் கும்பாபிஷேக கிரியையே கிரியைகளில் அதி உன்னதமாகும்.

ஆலயங்கள் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகங்கள் நடை பெறுவதால் ஊரும் மக்களும் புனிதம் அடைகின்றனர். அந்த வகையில் சங்கானை மாவடியில் எழுந்தருளியிருக்கும் ஞான வைரவர் தன்னைத்தொழும் அடியவர்களின் உடல். உள ஆரோக்கியத்தையும். ஆன்மீக வளர்ச்சியையும் பேணி மகிழ்வுடன் வாழ வழிவகுப்பார் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சிறப்புகளும். வல்லமையும். அருளாட்சியும் பொருந்திய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்படும் கும்பாபிஷேக மலர் சிறப்பாக வெளிவரவும். அனைவரும் ஞான வைரவப் பெருமானுடைய திருவருள் பெற்று மண்ணிலே நல்ல வண்ணம் வாழவும். நல்விழுமியங்களும். அறநெறியும் இம்மண்ணிலே எழுச்சி பெறவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல மாவடி ஞானவைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**இறைபணியில், தவத்திரு வேலன் சுவாமிகள்,**
**ஆதீனமுதல்வர், சிவகுரு ஆதீனம், நல்லூர்.**



## புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்!

உலகோர் உய்வடைய இறை வழிபாடு ஒன்றே உற்ற துணையாம்.

நம் மூதாதையர் தாம் வழிபாடு இயற்றியதோடு அல்லாமல், தம் சந்ததியினரும் உய்வடைய வேண்டி. ஊர் தோறும் பல ஆலயங்களை அமைத்து வைத்தனர். நமது வழிபாட்டிற்கென அப்பெருமக்கள் ஆக்கி வைத்த ஆலயங்களை. பேணி வாழ்வது எமது கடமையாகும்.

வேறுபட்ட ஆன்மபக்குவமுடைய பலரும். வழிபட்டு உய்யவேண்டி. ஒன்றே ஆன எமது இறைவன் பலவாய் வடிவு கொண்டு. நம்மை ஈர்த்து அருள் செய்து நிற்கிறான். இவ்விறை அம்சங்களில் ஒருவராய் நிற்பவரே நமது வைரவர் சுவாமியாம். வைரவரை காவல்த் தெய்வமாய் கருதி வழிபடுவது நம் முன்னோர் தம் இயல்பு. வைரவ சுவாமி ஆடையின்றி நிற்கும் இயல்புடையவர்.

அதனால் அவருக்கு நிர்வாணி எனும் ஒரு நாமமும் உண்டு. சாமுண்டி தேவியை சக்தியாய்க் கொண்டு நிற்கும் வைரவர். நல்லோரைக் காத்து தீயோரை அழிக்க வல்லவர். அந்த வைரவரை வழிபடக் கிடைப்பது என்பது பெரும் பாக்கியமாம். அவ்வகையில் ஞானவைரவரை வழிபடக் கிடைத்த சங்கானை மாவடியைச் சேர்ந்த மக்கள் பாக்கியவான்களே.

சங்கானை என் தாயாரின் ஊரான சண்டிலிப்பாயிற்க்கு அருகில் உள்ளது. அவ்வாலயத்தைச் சேர்ந்த கஜமுகவரதன் அவர்கள் கொழும்பிலுள்ள எங்களது ஐஸ்வர்ய லட்சுமி திருக்கோயிலை வளர்த்தெடுத்த உண்மைத் தொண்டராய் விளங்குகிறார். அவரது பக்தியும், தொண்டும் இக்கலியுகத்தில் காணுதற்கரியவாம். இத்தொடர்புகளால். ஞானவைரவரின் புனருத்தாரண கும்பாபிஷேகச் செய்தி அறிந்து. எல்லையற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். கும்பாபிஷேகத்தையொட்டி சிறப்பு மலர் ஒன்றை அடியார்கள் வழிகொனர்வது போற்றத்தக்க செயலாகும்.

இப்பணிகளில் ஈடுபட்டுழைத்த தொண்டர்கள் அனைவரதும் திருவடிகளை போற்றிப்பணிகின்றேன். வைரவரின் திருவருளால் இவ்வுலகம் உய்யும் என்பதில் ஐயமில்லை.

எல்லோரும் வாழ்கவென அனைவரும் பிரார்த்திப்போம்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

**கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்**

## பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்து

எமது மாவடி ஞான வைரவர் ஆலயம் முன்னூறு ஆண்டுகள் பழமையான வரலாற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. இதில் இன்னொரு சிறப்பு என்னவென்றால் எனது பாட்டனார் திரு.ஆறுமுகம் மார்க்கண்டு முதற் பூசகராக செயல்பட்டுள்ளார் என்று ஆலய வரலாற்று ஆவணபடுத்தலில் இருந்து அறிந்து பெரு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

மேலும் ஆலய பரிபாலன சபைத் தலைவர் என்ற வகையில் இவ்வாலய புனருத்தாரண வேலைகளுக்குப் பணஉதவி பொருள் உதவி நல்கிய உள்ளூர் அன்பர்கள். வெளியூர் அன்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு இவ்வாலயத்தை அமைத்த கட்டிட கலைஞர்கள். சிற்பாச்சாரியர்கள். வர்ணப்பூச்சுக் கலைஞர்கள். மின்சார வேலைப்பாடுகள் செய்த ஊழியர்கள் எல்லோருக்கும் நன்றி கூறு வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். சிறப்பாக எமது இளைஞர்கள் இரவு பகலாக இவ்வாலயத்தை சுற்றி ஆற்றுகின்ற சேவை அளப் பரியது. அவர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும் மேலும் கும்பாபிஷேக நிகழ்வை சிறப்பாக முன்னெடுத்து நிறைவு செய்து தந்த ரவிக்குருக்கள ஐயாவிற்கும் எனது நன்றிகள்.

வைரவப் பெருமானுடைய திருவருளால் இன்று எமது ஆலயம் ஐந்தாவது தடவையாகவும் கும்பாபிஷேகத்தை கண்டு நிற்கின்றது. மேலும் எமது வைரவப் பெருமான் இன்னும் பல கும்பாபிஷேகங்கள் கண்டு எமது கிராமம் அனைத்து செல்வங்களும் பெற்று ஆன்மீக சேவையில் நின்று நிலைக்க வாழ்த்தி எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**த.சிவசுப்பிரமணியம், தலைவர்,**
**பரிபாலன சபை, மாவடி ஞான வைரவர் தேவஸ்தானம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரியளவு போதைப்பொருளுடன் ஏழு கடற்றொழிலாளர்கள் கைது

(கொழும்பு)

நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய போதைப்பொருள் பிடிமானமான சுமார் 1 பில்லியன் ரூபாய் மதிப்புள்ள ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருட்களுடன் ஏழு கடற்றொழிலாளர்களையும் ஆழ்கடலில் வைத்து கடற்படையினர் கைது செய்துள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் புத்திக சம்பத் தெரிவித்தார்.

கப்பலில் 51 பைகள், 700 கிலோகிராம் எடையுள்ள 500 ஐஸ் பொதிகள் மற்றும் 178 ஹெரோயின் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த போதைப்பொருள் கப்பல் தென் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரரான கொஸ்கொட சுஜிக்கு சொந்தமானது என்று கடற்படைக்கு தகவல் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. (நி-8)




இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கமும் கிளி/முக்கொம்பன் மகா வித்தியாலயமும் இணைந்து நடத்திய சர்வதேச காடுகள் தினம் நேற்று முன்தினம் பாடசாலையில் அதிபர் ப.ஜோயல் பியசீலன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சர்வதேச காடுகள் தினத்தினை முன்னிட்டு இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கத்தினால் மாணவர்கள் மத்தியில் பல்வேறு போட்டி நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-மகாலிங்கம்)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 350 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 650 | 600 | 800 |
| தக்காளி | 300 | 250 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 220 | 200 |
| கோவா | 300 | 350 | 320 |
| கரட் | 600 | 700 | 600 |
| பூசணி | 200 | 160 | 200 |
| புடோல் | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 100-300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 250 | 160 |
| பாகற்காய் | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 400 | 250 | 300 |
| பயற்றங்காய் | 300 | 250 | 400 |
| லீக்ஸ் | 250 | 300 | 400 |
| பீற்றூட் | 400 | 250 | 400 |
| கறிமிளகாய் | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 2500 | 2000 | 2400 |
| போஞ்சி | 550 | 550 | 700 |
| கத்தரிதம்புள்ள | 350 | 200 | 500 |
| கீரை - 1 பிடி | 100-140 | 150 | 150 |
| தேசிக்காய் | 150 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 280 | 160-200 | 200-240 |
| இராசவள்ளி | 400 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 500 |
| முள்ளங்கி | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 150 | 60 |
| வல்லாரை | 100 | 100 | 80 |
| ஈரப்பலா | -- | 100 | 240 |

# இன்று ஒரு தகவல் 350

தென்கச்சி கோ. சுவாமிநாதன்



## அர்த்த பஞ்சகம்

ஒருவர் அவசரமாகப் போய் கொண்டிருந்தார். எங்கே போய் கொண்டிருக்கின்றீர்கள்? என்று கேட்டார் ஒரு பெரியவர். கடைக்குப் போகின்றேன் என்றார் இவர். அங்கே போவதற்கு முன்னால் தெரிந்து கொள்ள வேண்டியதெல்லாம் தெரிந்து கொண்டீர்களா? என்றார் அந்தப் பெரியவர். கடைக்குப் போய் காசைக் கொடுத்து பொருட்களை வாங்கிக் கொண்டு வரப் போகின்றேன். இதிலே தெரிந்து கொள்ள என்ன இருக்கிறது என்று சொன்னார் அலட்சியமாக.

இப்போது அந்த பெரியவர் பேச ஆரம்பித்தார். இந்த உலகத்தில் எந்த ஒரு செயலிலும் இறங்கப் போவதற்கு முன்னர் ஐந்து விடயங்கள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றார். உதாரணமாக ஒருவன் கடைக்குப் போய் ஏதோ ஒரு பொருளை வாங்கிக் கொண்டு வாருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது கூட இந்த ஐந்து விடயங்கள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

முதலிலே அந்தப் பொருள் எப்படிப்பட்டது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக தன்னைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும் அப்போது தான் அந்தப் பொருள் தனக்கு தேவையா? இல்லையா என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மூன்றாவதாக அந்தப் பொருளை அடைவதற்கு என்ன வழி? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது எவ்வளவு பணம் கொடுத்தால் இந்தப் பொருள் கிடைக்கும் என்பது போன்ற விடயங்கள். நான்காவது அந்தப் பொருளை அடைவதன் மூலம் நாம் அடையக் கூடிய பயன் என்ன? என்பதை உணர வேண்டும்.

ஐந்தாவதாக அந்தப் பொருளை அடைவதில் இருக்கக் கூடிய தடை என்ன என்பதைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

பெரியவர் பேசுவது ஏதோ தத்துவம் மாதிரி தெரியுதல்லோ. தத்துவம் தான். நமக்கு புரியவில்லை என்றால் அது தத்துவம் தானே. இப்படி உலகியல் வாழ்கையிலே சின்ன சின்ன விடயங்களிலேயே நாம் ஐந்து விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

அதற்குப் பெயர் அர்த்த பஞ்சகம். வைணவ சமயத்திலே அர்த்த பஞ்சகம் என்பது மிகவும் பெரிய விடயம். கடைக்குப் போறது மாதிரி கடவுளைப் பார்க்கப் போகும் போது நாம் ஐந்து விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். முதலில் பரம்பொருள் என்பது என்ன? அதனுடைய தன்மைகள் என்ன? இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு பரமாத்மா ஸ்வரூபம் என்ற பெயர்.

இரண்டாவதாக நாம் யாரு நமது நன்மைகள் என்ன என்பது பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு ஜீவாத்த ஸ்ரூபம் என்று பெயர். நான் யார் என்று எனக்கே தெரியவில்லை என்னும் போது நான் சொல்கின்றேன் என்றும் இது என்னுடையது என்றும் சொல்வது தவறு தானே.

மூன்றாவது விடயம். பரம்பொருளை நாம் அடைவதற்கு வழி எது. இதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு உபய ஸ்பாரூபம் என்று பெயர். நான்காவது விடயம். நாம் அடைய வேண்டிய பயன்கள் என்ன என்பது பற்றி அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு புருஷார்த்தம் என்று பெயர். ஐந்தாவது அந்தப் பயனை நாம் அடையவிடாமல் தடுக்கும் காரணிகள் யாவை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இது தான் விரோதி ஸ்ரூபம் என்று சொல்வார்கள். இதைத் தான் தடையியல் என்று சொல்கிறார் கள்.

அதாவது பராத்மாவைப் பற்றிய அறிவு ஜீவாத்மாவைப் பற்றிய அறிவு. உபாயம் பற்றிய அறிவு. புருஷாத்தம் பற்றிய அறிவு. இந்த நாலு அறிவுக்கும் எதிரிடையா அதாவது அதையெல்லாம் தப்பா புரிந்து கொள்ளுவதாலே ஏற்படுகின்ற அறிவு விரோதிஸ்வரூபம்.

என்ன சார் இது. தகவலிலே ஏதோ கதை சொல்லுவீர்கள் என்று பார்த்தால் தத்துவம் பேசிக் கொண்டு இருக்கிறார்களே என்று நீங்கள் நினைக்கலாம். இதுவும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு பெரிய விடயம் தான். காதுகளிலே போட்டு வையுங்களேன். என்னுடைய நண்பர் ஒருத்தர் ஒரு நாள் என்னிடம்சொன்னார்.

சார் அடுத்த மாதம் ஒரு கல்யாணம். போறதா வேண்டாமா என்று ஒரே குழப்பமாக இருக்கிறது என்றார். நான் உடனே அர்த்த பஞ்சக உபதேசம் செய்ய ஆரம்பித்து விட்டேன் . அவர் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டு சரி நான் திருமண விட்டிற்கு போவதாக முடிவு செய்து விட்டேன் என்று சொன்னார். எப்படி அந்த முடிவிற்கு வந்தீர்கள் என்று கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னார் இரண்டாவதாக ஒரு விடயம் சொன்னீர்களே. அதைப் புரிந்து கொண்டதற்கு பின்பு தான் இந்த முடிவிற்கு வந்தேன் என்று சொன்னார்.

என்ன இரண்டாவது விடயம் என்று கேட்டேன்.

தன்னைப்பற்றி புரிந்து கொள்ள வேண்டும் என்று சொன்னீர்கள். உடனே என்னைப் பற்றி புரிந்து கொண்டேன். நான் யார் என்பது எனக்கு தெரிந்தது. உடனே போவது தான் நல்லது முடிவு செய்துவிட்டேன் என்றார். நீங்கள் யார் என்று கேட்டேன். நான் தான் அந்தக் கல்யாணத்தில் தாலி கட்ட வேண்டிய மாப்பிளை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி முதியோர் இல்ல 18 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தின் 18 ஆவது ஆண்டு விழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி.இராஜாம்பாள் பாலச்சந்திரன் (அமெரிக்கா) கலந்து கொள்வதுடன் கலை நிகழ்வுகளாக நாடக ஆசிரியர் பு.கணேசராஜாவின் தயாரிப்பில் "மாவைநித்தியானந்தனின் முட்டை..." "என்ன வென்று சொல்வேனடி...." ஆகிய நாடக அரங்க நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (நி-8)

## மணவாளக் கோல உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் மணவாளக் கோல உற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.15 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், மூலமூர்த்திக்கு விஷேட பூஜை, வசந்தமண்டப பூஜை, திருவூஞ்சல் நடைபெற்று விநாயகப் பெருமானின் திருவீதியுலாவும் இடம்பெறும் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார். (நி-8)

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி வருடாந்த பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் விழா நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு திருப்பள்ளியெழுச்சியுடன் ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு அர்த்தசாமப் பூசையுடன் நிறைவு பெறவுள்ளது.

இவ் வருடாந்தப் பொங்கல் விழாவை முன்னிட்டு பொங்கிப் படைக்கும் அடியார்கள் இராஜகோபுரத்தின் முன்றலில் அமைக்கப் பெற்றிருக்கும் தற்காலிக மண்டபத்தில் படையல்களைப் படைத்து நேர்த்தியைப் பூர்த்தி செய்ய முடியும் எனவும் ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## லொங்கன் பழம்/முரளிப்பழம்


Botanical name- Dimocarpus longan
Family- Sopindaceae
Engl- Longan fruit

வடமாகாணக் காடுகளில் இவ் முரளிப்பழ மரம் வளருகிறது. மருத்துவப் பண்புகள் நிறைந்த சுவையான சிறிய பழங்களாகும். கொத்துக் கொத்தாக மரங்கள் முழுக்க பழங்கள் காய்க்கும். இது இந்தியா, சீனா நாட்டினை தாயகமாகக் கொண்டது.

ஆனாலும் வியட்நாம், தாய்லாந்து, தாய்வான் போன்ற நாடுகளில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இப்பழங்களில் அதிகளவு விற்றமின் C,B, பொட்டாசியம், செம்புச்சத்து, நாகச்சத்து, மக்னீசியம், பொஸ்பரஸ், இரும்புச் சத்து, கல்சியம், மகனீஸ் போன்ற தாதுச் சத்துக்களும் காணப்படும் கலோரி குறைவான பழங்களாகும். உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததும் Anti oxidant வேதியற் சத்துக்களுமான பொலிபினோல் போன்ற ஹாலிக்கமிலமும் காணப்படும்.

இப்பழங்களைச் சாப்பிட்டு வர கொலாஜின் உற்பத்தியை கூட்டி, தோலின் கலங்களை புதுப்பித்துக் கொண்டே இருப்பதாலும் தோலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது. இப்பழங்களில் இருக்கும் சத்துக்கள் மன அழுத்தத்திற்கு காரணமான Cortisol ஆன Stresshormone இனை குறைக்கும் தன்மை இருப்பதால் மனஅழுத்தத்தைக் குறைத்து போதிய தூக்கத்தை ஏற்படுத்தும்.

பயத்தால் ஏற்படும் அசௌகரியங்களைக் குறைக்கக்கூடிய serotonin எனும் ஹோமோன் இப்பழங்களில் காணப்படுவதால் பயம் போன்ற



உணர்வுகளையும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

லொங்கன் பழங்களில் பொட்டாசியம் சத்துக்கள் காணப்படுவதால் அதி உயர் குருதி அமுக்கத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக் கூடியதாக இருக்கும். தசைகளினதும் நரம்புகளின் செயற்பாடுகளை சீராக வைத்திருக்கும் தன்மையும் இப்பழங்களைச் சாப்பிடுவதால் ஏற்படும். இப் பழங்களை உரித்துப் பார்த்தால் கண்விழி போலவே காணப்படுவதால் சீனமக்கள் இப்பழங்களை Dragon fruits எனவும் அழைப்பர்.

இப்பழங்களில் காணப்படும் சத்துக்கள் இரத்த அணுக்களில் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும். இதனால் இரத்தச்சோகை உள்ளவர்கள் இப்பழங்களை கிடைக்கும் போது தாராளமாக சாப்பிட்டு வரலாம். இப் பழங்களில் காணப்படும் பொலிபினோல் சத்துக்கள் புற்று நோய் வராமல் தடுக்கக் கூடியது. பொதுவாக இப்பழங்களைச் சாப்பிட்டு வந்தால் பெருங்குடல், ஈரல், நுரையீரல் போன்ற பகுதிகளில் புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கலாம். ஒவ்வாமை, குடல் அழற்சி போன்றவற்றையும் நீக்கும் ஆற்றல் இப்பழங்களைச் சாப்பிடுவதால் கிடைக்கிறது.


இப்பழம் சில பருவகாலங்களில்தான் கிடைக்கும். சமிபாடின்மை, வயிற்று உப்பிசம் இருக்கிறவர்கள் இப்பழங்களைச் சாப்பிட நன்மை கிடைக்கும். ஞாபக சக்தியை கூட்டக்கூடிய சிறந்த பழங்களாகும்.

இப்பழங்கள் கிடைக்கும் காலங்களில் தாராளமாக சாப்பிட-மேற்படி ஆரோக்கிய நன்மைகளை பெறக் கூடியதாக இருக்கும். ஒரு நாளைக்கு பத்து லொங்கன் பழங்களைச் சாப்பிடலாம்.

உடம்பிற்கு சக்தியையும் நோய் எதிர்ப்பு ஆற்றலையும் அதிகரிக்கக்கூடியது. இப்பழங்களுக்கு வைரஸ், பக்ரீரியா தொற்றுக்களுக்கு எதிராக செயற்படும் ஆற்றல் உண்டு. பொதுவாக பாரம்பரிய மருத்துவத்தில் இப் பழங்கள் பயன்படுத்தப்படுகிறது. நாட்பட்ட நோய்களை (Choronicdiseases) தடுக்கும் ஆற்றல் இப்பழங்களைச் சாப்பிடுவதால் கிடைக்கும்.

நார்ச்சத்துக்களும் இப் பழங்களைச் சாப்பிடுவதால் கிடைக்கும். நார்ச்சத்துக்களும் இப்பழங்களில் காணப்படுவதால் சமிபாட்டை தூண்டி, குடலின் செயற்பாட்டை சீராக்கி மலக்கட்டையும் நீக்கக் கூடியது. குடலில் நன்மை பயக்கும் பக்ரீரியாக்களின் உற்பத்தியை தூண்டி குடல் இயக்கத்தை சீராக்கி சமிபாட்டையும் தூண்டும்.

இப்பழங்களை சாப்பிட்டு



வர தூக்கமின்மை நீங்கும். நரம்பு மண்டலத்தையும் பலப்படுத்தும். தோல் சுருக்கம், தோல் வறட்சியை போக்கக்கூடியது லொங்கன் பழங்கள். சீன மருத்துவத்தில் ஆண், பெண் இருபாலார்களும் இப்பழங்களை சாப்பிடுகிறார்கள். நரம்புகளை பலபடுத்துவதற்காக சாப்பிடுகிறார்கள்.

லொங்கன் பழங்களில் Bio-active இரசாயன சத்துக்கள் காணப்படுவதால் உடல் சோர்வை நீக்கி உடலையும் மனதையும் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ள உதவுகிறது. இப்பழங்களில் gollicacid காணப்படுவதால் காயம், தோல் பிரச்சினை, குடல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய ஆற்றலும் உண்டு.

முகத்தை பொலிவாகவும் முகத்தில் சுருக்கம் ஏற்படாமல் தடுக்கும் ஆற்றல் இப்பழங்களை சாப்பிடுவதால் கிடைக்கும். ஆசியா நாடுகளுக்குரிய பழங்களாக இருந்தாலும் இன்று உலகம் முழுக்க இப்பழங்களை பயன்படுத்துகிறார்கள்.

ஒரு கொத்தில் 20-40 பழங்கள் காணப்படும். லொங்கன் பழ இனங்களில் 30 இனங்கள் உண்டு. மரங்களை நட்டு 6 வருடங்களின் பின்பு காய்க்கத் தொடங்கும். பொதுவாக மழை காலம் முடிந்து பனி காலங்களில் காய்க்கத் தொடங்கும்.

எமது வடமாகாணக் காடுகளில் இப் பழங்கள் தாராளமாகக் கிடைக்கும். இப்பழங்களின் விழிப்புணர்வின்மையால் இவ்வளவு மருத்துவப் பண்புகள் நிறைந்த பழங்களை எமது பிரதேச மக்கள் பயன்படுத்துவது குறைவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 741





அப்படியொன்றும் ஏற்படாமல் தடுப்பதற்காகத்தான் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் சிற்றரசர்கள் கூடுகிறார்களாம். ஆதித்த கரிகாலரும் அங்கேதான் போகிறாராம்.

"குதிரைகள் நெருங்கி வந்துவிட்டன. இரைந்து பேசாதீர்கள்!" என்று ஒருவன் எச்சரித்துவிட்டு, "இளவரசர் ஆதித்த கரிகாலரின் முகம் எவ்வளவு வாட்டமடைந்திருக்கிறது பார்த்தாயா?" என்று கேட்டான்.

"அவர் முகம் வாட்டமடைந்தில்லாமல் எப்படியிருக்கும்? ஆதித்த கரிகாலருக்குத் தம்பியின் பேரில் பிராணன். அப்படிப்பட்ட தம்பியைப் பற்றித் தகவல் தெரியவில்லையென்றால் தமையனுக்கு வருத்தமாயிராதா? தந்தையோ நடமாட்டமில்லாமலிருக்கிறார்!"

"இதெல்லாம் உலகத்தில் இயற்கை, தம்பி! இளவரசருடைய முகவாட்டத்துக்குக் காரணம் இவையெல்லாம் அல்ல. இரட்டை மண்டலத்தார் மீது படையெடுத்துப் போக வேண்டும் என்று கரிகாலருக்கு ஆசை அது கைகூடவில்லையே என்றுதான் கவலை!"

"அது ஏன் கைகூடவில்லை? யார் இவரைப் படையெடுத்துப் போக வேண்டாம் என்று தடுக்கிறார்கள்?" "வேறு யார்? பழுவேட்டரையர்கள் தான்! படையெடுப்புக்கு வேண்டிய தளவாட சாமக்கிரியைகள் கொடுக்க மறுக்கிறார்களாம்!"

"ஏதேதோ இல்லாத காரணங்களையெல்லாம் கற்பித்துச் சொல்லுகிறார்கள். உண்மைக் காரணம் உங்கள் ஒருவருக்கும் தெரியவில்லை" என்றான் ஒருவன். "எல்லாம் தெரிந்தவனே! உண்மைக் காரணத்தை நீதான் சொல்லேன்!" என்று இன்னொருவன் கேட்டான்.

"ஆதித்த கரிகாலர் யாரோ ஒரு பாண்டிய நாட்டுப் பெண் மீது காதல் கொண்டிருந்தாராம். இளவரசர் வடபெண்ணைப் போருக்குச் சென்றிருந்த போது, பெரிய பழுவேட்டரையர் அப்பெண்ணை மணந்து கொண்டுவிட்டாராம். அவள்தான் இப்போது பழுவூர் இளையராணியாக விளங்கிச் சோழநாட்டில் சர்வாதிகாரம் செலுத்துகிறாள். அதிலிருந்து ஆதித்த கரிகாலரின் மனமே பேதலித்துப் போய்விட்டதாம்!"

"இருக்கலாம் இருக்கலாம்? உலகத்தில் எல்லாச் சண்டைகளுக்கும் யாராவது ஒரு பெண் தான் காரணமாயிருப்பாள் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா?"

"எந்தப் பெரியவர்கள், தம்பி, அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்? சுத்தப் பைத்தியக்காரத்தனம்! இளவரசர் ஒரு பெண்ணை விரும்பினார் என்றால், அவள் போய் ஒரு அறுபது வயதுக் கிழவனை மணந்து கொள்ளுவாளா? சொல்லுகிறவர்கள் சொன்னால் கேட்பவர்களுக்கு மதி இல்லையா?"


"அப்படியானால் ஆதித்த கரிகாலருக்கு இன்னும் கலியாணமாகாமலிருப்பானேன்? நீர்தான் சொல்லுமே?"

"சும்மா இருங்கள்! இதோ நெருங்கி வந்துவிட்டார்கள். இளவரசருக்கு வலது புறத்தில் வருகின்றவன் தான் பார்த்திபேந்திர பல்லவன் போலிருக்கிறது. இடது புறத்தில் வருகின்றவன் யார்? வாணர்குலத்து வந்தியத்தேவனா?" "இல்லை கடம்பூர் சம்புவரையர் மகன் கந்தமாறன். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குரு சிஷ்யன்



ஒரு ஊரில ஒரு குட்டிப் பையன் இருந்தான். அவனுக்கு வாள் பயிற்சி செய்து பெரிய போர் வீரனா ஆகணும்"என்று ஆசை அதனால ஒரு நல்ல குருவிடம் சேர்ந்து பயிற்சி எடுத்துக் கொள்ள நினைச்சான்.

அப்பதான் பாக்கு ஊர்ல ஒரு வாள் பயிற்சி கொடுக்குற ஒரு குருவ பத்தி அவனுக்கு தெரிய வந்துச்சு. உடனே அவரை போய் பார்த்தான் அந்த குட்டி பையன், ஐயா எனக்கு வாள் பயிற்சி செஞ்சு மிக பெரிய போர் வீரனா ஆகணும் எனக்கு வாள் சுழற்ற கத்து கொடுங்கன்னு சொன்னான்.

அந்த குருவும் அவனுக்கு வாள் பயிற்சி சொல்லி தர்றதா ஒத்துக்கிட்டாரு, ஆனா தன்னோட ஆச்சிரமத்தில தங்கி தனக்கு பணிவிடைகள் செஞ்சா மட்டுமே வாள் பயிற்சி சொல்லி தருவேன்னு சொன்னாரு.

உடனே அந்த குட்டி பையனும் தன்னோட அப்பா அம்மா கிட்ட சொல்லிட்டு அந்த குருவோடு ஆச்சிரமத்திலயே போய் தங்கிட்டான் அவன தினமும் துணி துவைக்கிறது, சமையல் செய்யுறது, பாத்திரம் கழுவுறதுனு வேலை வாங்கிக்கிட்டே இருந்தாரு அந்த குரு.

அவன் எந்த வேலை செஞ்சாலும் அவனை திட்டி அடிக்க ஆரம்பிச்சாரு அந்த குரு, எதிர்பாராத நேரத்தில குரு அடிக்கிற அடிய எல்லாம் வாங்குன அந்த பையனுக்கு ஒண்ணுமே புரியல, ஏன் நம்மள இந்த குரு அடிக்கிறாருனு குழப்பமா இருந்துச்சு அவனுக்கு. இப்படியே கொஞ்ச மாதங்கள் ஆச்சு, ஆனா அவனுக்கு வாள் சுழற்றத பத்தி எந்த பயிற்சியும் கொடுக்கவே இல்ல, நாள் ஆக ஆக அந்த பையனுக்கு சந்தேகம் வந்துச்சு.

குரு நமக்கு வாள் பயிற்சி கொடுக்காம எதுக்கு இப்படி வேலை வாங்குறாருனு நினைச்சான், உடனே குரு கிட்ட போயி ஏன் எனக்கு வாள் பயிற்சி கொடுக்காம வீட்டு வேலை மட்டும் செய்ய சொல்றீங்கனு கேட்டான். அதுக்கு அந்த குரு சொன்னாரு வாள் சுழற்ற போதுமான உடல் தகுதி உடற்பயிற்சி செஞ்சா தான் வரும்னு இல்லை உங்க அம்மா மாதிரி வீட்டு வேலை செஞ்சாலும் வரும்னு சொன்னாரு.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுக்குரிய செயல்களைச் செய்வதே உற்சாகத்தில் நிலைத்திருக்க எளிய வழி.

~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதமர் மோடி - ஜனாதிபதி அநுர சங்கரா! ஆர்கொலோ சதுரர்

தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை சங்கரா ஆர் கொலோ சதுரர் என்பார் மணிவாசகர்.

உன்னை எனக்குத் தந்து; என்னை நீ ஆட்கொண்டாய். அப்படியானால், இங்கு யார் கெட்டிக்காரர் என்பது குறித்த திருவாசகத்தின் பொருள்.

ஆம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவையும் பார்க்கும்போது மணிவாசகர் பாடிய அந்தத் திருவாசகமே நெஞ்சில் நிழலாடுகிறது.

உண்மை. இந்தியாவும் இலங்கையும் எப்படி ஆரத்தழுவின என்பதைப் பார்த்தீர்களா?

அதிலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர வெற்றி பெறுவதை இந்தியா விரும்பவில்லை.

அதேநேரம், அநுர வெற்றி பெற்றபோது, அவரை இந்தியா தட்டிவிடவுமில்லை. இது தான் இந்தியப் பிரதமர் மோடியின் சிறப்பு.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுரவை இந்தியாவுக்கு அழைத்த பிரதமர் மோடி; அவரை ஒரு சிறிய நாட்டின் அதிபர் என்று இம்மியும் நினைக்காமல், அண்டை நாட்டின் ஜனாதிபதி என்ற நட்புறவோடு அவருக்கு மகத் தான வரவேற்பை வழங்கினார்.

ஏலவே அநுர, எந்தவித ஆடம்பரங்களும் ஆரவாரங்களும் இல்லாமல் ஜனாதிபதியாகப் பதவியேற்றவர்.

வழமையில் ஜனாதிபதியாகப் பதிவியேற்கும்போது, பின்பற்றப்படும் அதிகூடிய செலவுக் கலாசாரத்தை அறவே இல்லாமல் செய்து, தனது நெருங்கிய உறவுகளை அழைத்து பந்தா காட்டாமல், மிகக் குறைந்த செலவோடு தனது பதவியேற்பை நிறைவு செய்தார்.

முப்படைகள், தேர்ப்படை, குதிரைப்படை, காலால் படைகளின் அணிவகுப்புகள், பீரங்கிகளின் முழக்கம் என எதுவும் இல்லாமல் ஒரு சாதாரண நிகழ்வாகப் பதவியேற்பை நடத்திய அநுரவுக்கு இந்தியா மிக உன்னதமான கௌரவத்தை வழங்கியது.

ஆம், இந்தியாவுக்கு ஜனாதிபதி அநுர சென்றபோது பிரதமர் மோடி, ஜனாதிபதி திரௌபதி முர்மூர் மற்றும் மந்திரி பிரதானிகள் கூடி நிற்க, இந்தியப் படையினர் வழங்கிய அணிவகுப்பு மரியாதையை ஒரு நாட்டின் தல்லவனாக செங்கம்பளத்தில் வீறு நடையுடன் சென்று ஏற்றுக்கொண்ட அக்கணம், ஜனாதிபதி அநுர இந்தியாவின் உன்னதமான நண்பராகினார்.

நெகிழ்ந்துபோன அவர்; பிரதமர் மோடியை இலங்கைக்கு வருமாறு அழைத்தார். அழைப்பை ஏற்றுக் கொண்ட மோடி கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி இங்கு வருகை தந்து நேற்று வரை தங்கியிருந்தார்.

பிரதமர் மோடிக்கு இங்கு வழங்கப்பட்ட மரியாதையை என்னவென்று சொல்வது.

இந்த நாட்டின் எந்த ஆட்சித் தலைவனும் நினைக்காத அளவில், இலங்கையின் அதியுயர் விருதான மித்ர விபூசண விருதை பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி வழங்கியபோது, பிரதமர் மோடி அநுரவின் மீளா அன்புக்கு ஆளானார்.

என்ன செய்வோம் நாம், இதுகாறும் இந்தியாவைக் குறைகூறி, கூறி எங்களுக்குக் கிடைத்த அத்தனை சந்தர்ப்பங்களையும் போட்டுடைத்தோம். இப்போதுதான் எங்கள் தலைவர்கள் பிரதமர் மோடியுடன் ஒரு குறூப் போட்டோ எடுத்துள்ளார்கள்.

காலம் எங்கோ போய்விட்டது. இராப்பொழுதில் சூரிய நமஸ்காரத்துக்கு தயாராகும் நம்மவர்களை என்செய்வோம் பராபரமே.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ருஸ்டி கைது; மன்னிப்புச்சபை கவலை

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கொழும்பு இளைஞன் முகமட் ருஸ்டியை 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைப்பதற்கு உத்தரவிட்டுள்ள ஆவணத்தை தாம் பார்வையிட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொழும்பில் 22 வயதான முகமது ருஸ்டி கடந்த மார்ச் 25ம் திகதி கைது செய்யப்பட்டமை குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை ஆழ்ந்த கவலையடைந்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கப்போவதாக புதிய அரசாங்கம் வாக்குறுயளித்துள்ள போதிலும் அதிகாரிகள் அதனைத் தொடர்ச்சியாக பயன்படுத்துவது குறித்து நாங்கள் ஆழ்ந்த ஏமாற்றமடைந்துள்ளோம்.

ருஸ்டியைத் தடுத்து வைப்பதற்கான உத்தரவில் அவர் தீவிரவாத சித்தாந்தங்களால் தூண்டப்பட்டு சமூகங்களிற்கு இடையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் செயற்படுவது மற்றும் பாதுகாப்புப்படையினரிடம் அத்தகைய தகவல்களைத் தெரிந்தே மறைப்பது குறித்து சந்தேகம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ருஸ்டி கைது செய்யப்பட்டு இரண்டு வாரங்களான பின்னரும் அவரைப் கைது செய்தமை அல்லது தொடர்ந்து தடுத்து வைத்துள்ளமை ஆகியவற்றை நியாயப்படுத்தக்கூடிய குற்றவியல் செயற்பாடுகள் எவற்றிற்குமான ஆதாரங்களை வெளியிடக்கூடிய நிலையில் இலங்கை அதிகாரிகள் இல்லை.

இலங்கை அதிகாரிகள் உடனடியாக ருஸ்டிக்கான நியாயமான நடைமுறைகளை உறுதி செய்யவேண்டும்.

அவர் தனது குடும்பத்தவர்கள் சட்டத்தரணிகளைச் சந்திப்பதற்குத் தடையற்ற அனுமதியை வழங்க வேண்டும்.

மேலும், அவர் சர்வதேசளவில் குற்றம் எனக் கருதக்கூடிய எவற்றிலாவது ஈடுபட்டார் என்பதற்கான நம்பகத்தன்மைமிக்க ஆதாரங்களின் அடிப்படையிலான குற்றச்சாட்டுகள் இல்லாவிட்டால் அவரை விடுதலை செய்ய வேண்டும் எனக் கேட்டுள்ளது.

(ந-4,7)

# அமெரிக்க வரிக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் உதவமாட்டா

## அரசுக்கு ஹர்ஷ டி சில்வா அறிவுரை

அமெரிக்காவின் கதவுகள் அடைக்கப்படும் போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் கதவுகள் திறக்கப்படும் என்று எவராவது எண்ணினால் அது முற்றிலும் தவறாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (6) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வருடாந்தம் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கு அரச குழுவொன்று செல்வது வழமையாகும். இதன் போது அமெரிக்காவின் வரி குறித்துப் பேசப்படுமா என்பது எமக்குத் தெரியாது. நாணயநிதியத்தின் கண்காணிப்பில் இருப்பதால் எமக்கு நிவாரணம் வழங்குமாறு கோரினால் அதனை ஏற்கக் கூடியவரல்ல ட்ரம்ப்.

வியட்நாம், ட்ரம்பிடம் முன்மொழிந்துள்ளதைப் போன்று அசாதாரணமான வாய்ப்பொன்றை வழங்கினால் வரி குறைப்பு குறித்து சிந்திக்க முடியும் என்று அமெரிக்கா கூறுகிறது.

அவ்வாறெனில் அந்த அசாதாரணமான வாய்ப்பு என்ன என்பது குறித்து அரசாங்கமும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சும் தீர்மானிக்க வேண்டும்.

அமெரிக்காவின் கதவுகள் அடைக்கப்படும் போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் கதவுகள் திறக்கப்படும் என்று எவராவது எண்ணினால் அது முற்றிலும் தவறாகும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு எந்தளவுக்கு இலங்கை போராடியது என்பதை என்னைத் தவிர இந்தப் பாராளுமன்றத்தில் யாருக்கும் தெரியாது. எனவே இவை தொடர்பில் அரசாங்கம் தீர்க்கமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்றார்.

(ந-4,7)

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது

நாட்டின் இருவேறு பகுதிகளில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (05) பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவின் ஆசிகுளம் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வவுனியா பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை வெலிகந்த பொலிஸ் பிரிவின் நவசேனபுர பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வெலிகந்த - நவசேனபுர பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் ஆவார்.

மேலும் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ந-4,7)

# அரச வைத்தியசாலைகள் டிஜிட்டல் மயப்படுத்தப்படும்

## சுகாதார அமைச்சர் நளிந்த உறுதி

நாட்டின் அரச வைத்தியசாலை கட்டமைப்பு நவீனமயமாக்கப்பட்டு டிஜிட்டல் மயமாக்கப்படவுள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்தின் குறிக்கோள் முழு அரச சேவையையும் டிஜிட்டல் மயமாக்கி பொதுமக்களுக்கு மிகவும் வசதியான மற்றும் வினைத் திறனான சேவையாக மாற்றுவதாகும்.

அந்தவகையில், ஒன்றரை மில்லியன் சுகாதாரப் பணியாளர்களின் தகவல்கள் உட்பட மனித வளங்களை நிர்வகிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் முழுக்கவனம் செலுத்துவதன் மூலம் அதை டிஜிட்டல் மயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.


நோய்வாய்ப்படும் குடிமக்களுக்கு மிக உயர்ந்த அளவிலான சேவையை வழங்குவது சுகாதார நிபுணர்களின் பொறுப்பு. இதற்காக சுகாதார அமைச்சு அதன் கீழ் பணிபுரியும் அனைவருக்கும் தேவையான தொழில் சார்ந்த திறனை வழங்குவதுடன் நோயாளிக்கு மிக உயர்ந்த அளவிலான பராமரிப்பை வழங்கும் சூழலை உருவாக்கும் என்றார்.

(ந-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் மாத இராசி பலன்கள்

## பொறுப்பாக பணி செய்து பேரும் புகழும் அடையும் தனுசு இராசி நேயர்களே!



**கிரகநிலை** - தைரிய வீரிய ஸ்தானத்தில் புதன் , சனி - சுக ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), சூரியன் - பஞ்சம ஸ்தானத்தில் சந்திரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு - களத்திர ஸ்தானத்தில் செவ்வாய் - தொழில் ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 07-04-2025 அன்று செவ்வாய் பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார் . 10-04-2025 அன்று புதன் பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-04-2025 அன்று சூரிய பகவான் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-04-2025 அன்று ராகு பகவான் சுக ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-04-2025 அன்று கேது பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-04-2025 அன்று புதன் பகவான் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** சாதனை வில் என்பதற்கேற்ப சராசரி மனிதனாய் பிறந்து நல்ல செயல்கள் செய்தும் பொறுப்பாக பணி செய்து பேரும் புகழும் பெருமையும் அடையும் தனுசு ராசி நேயர்களே. இந்த மாதம் பொருளாதார மேன்மையும் புகழும் நிறைவாக கிடைக்கும். புத்திரர்கள் தவறான பழக்க வழக்கம் உள்ள நபர்களுடன் சேர்த்து சிரமப்படும் வாய்ப்புகள் உள்ளதால் விழிப்புடன் செயற்படுவது நன்மை தரும். கணவன்-மனைவி குடும்ப ஒற்றுமையில் சிலரது குறுக்கீடுகளில் மனக்கசப்புகள் தோன்றி பின்னர் படிப்படியாக நிலைமை சீராகும்.

**உத்தியோகஸ்தர்கள்:** வருமான வரித் துறை, சுங்க இலாகா, தணிக்கை துறை ஆகியவற்றில் உயர் பதவி வகிப்பவர்களுக்கு தன் துறை சார்ந்த ஊழியர்கள் ஒத்துழைப்பு குறைவினால் இட மாற்றம் அல்லது துறை சார்ந்த அதிகாரிகளின் நெருக்குதல்கள் ஆகியவற்றுக்கு ஆளாகி புதிய அனுபவ பாடங்களைப் பெறுவார்கள். தொழிலதிபர்கள் தங்கள் தொழிலில் சிறிது சுணக்கமான நிலை அடைவார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார்கள். புதிய ஒப்பந்தங்களைப் பெற்று முன்னேறுவர். பொருளாதார வரவுகள் சமச்சீராக இருக்கும். நற்செயலுக்கேற்ப புகழ் கிடைக்கும்.

**பெண்கள்:** முன்னேற்றம் காண்பர். வாழ்க்கைத் துணையுடன் இருந்து வந்த வீண் வாதங்களைத் தவிர்க்கவும். அடிக்கடி அவசியமில்லாமல் பயணம் செய்வதைத் தவிர்க்கவும். பணியிட மாற்றம் உறுதிபடுத்தப்படுகிறது. பெற்றோருக்கு உதவி செய்வதால் மிகுந்த நன்மைகள் உண்டாகும். கலைத்துறையினர் சிறந்த நிலைக்கு வரலாம். வேலை விடயமாக பயணம் மேற்கொள்ள வேண்டியதிருக்கும். அதிகமாக உழைக்க வேண்டியதிருக்கும். வாய்ப்புகள் வந்து குவியும். எந்த ஒரு வாய்ப்பையும் நிராகரிக்க வேண்டாம்.

**அரசியலில் உள்ளவர்கள்:** மிகவும் சிறப்பான பலன்களைக் காண்பர். அரசிடம்




இருந்து சலுகைகள் கிடைக்கும். உயர் பதவிகள் கிடைக்கும். அதே வேளையில் அதிகமாக உழைக்க வேண்டியதிருக்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கலாம்.

**மாணவர்கள்:** மிகுந்த ஆர்வமுடன் படித்து நல்ல தேர்ச்சியும் புகழும் பெறுவார்கள். ஓவியப் பயிற்சிபெறும் மாணவர்கள் தங்கள் திறமையை நன்கு வெளிபடுத்தி பெயரும் புகழும் பெறுவார்கள். படிப்புக்கு தேவையான பெருளாதார வசதிகள் தாராளமாக கிடைக்கும்.

**மூலம்:** இந்த மாதம் தொழிலதிபர்கள் தொழிலை விரிவு செய்வார்கள். எதிர்பார்த்த பணவரவுகள் வந்துசேரும். வியாபாரிகள் சிலர் வெளிநாட்டில் கிளைகள் தொடங்குவார்கள். குலதெய்வத்தை வணங்குவதில் ஏற்பட்ட தடை, தாமதங்கள் விலகும். கலைத்துறையினருக்கு முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு மதிப்பு உயரும்.

**பூராடம்:** இந்த மாதம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். வாகன சேர்க்கை ஏற்படும். சகோதரர்கள் மத்தியில் ஒற்றுமை கூடும். சொத்துப் பிரச்சினையில் நல்ல முடிவு வரும். வழக்குகள் சாதகமாகும். திருமணம் நடத்துவதில் ஏற்பட்ட தடை, தாமதங்கள் நீங்கும். வேலைசெய்யும் பிள்ளைகள் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள்.

**உத்திராடம் 1 ஆம் பாதம்:** இந்த மாதம் உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வுகள் வந்துசேரும். தொழிலதிபர்கள் தொழிலை அபிவிருத்தி செய்வார்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். பிள்ளைகள் பெற்றோர்களால் பாராட்டப்படுவார்கள். நீண்டகாலமாக இருந்துவந்த சொத்துப் பிரச்சினைகள் நல்ல தீர்வுக்கு வரும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவிகள் வந்துசேரும்.

**பரிகாரம்:** ஞாயிறு, வியாழக் கிழமைகளில் சிவன் கோவிலை வலம் வரவும். சாமந்தி மலரை குருவிற்கு அர்ப்பணிக்கவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 6, 7, 8.

**அதிஷ்ட தினங்கள்:** 1, 27, 28

## எளிய வாழ்வு முறையை அமைதியுடன் விரும்பும் மகர இராசி நேயர்களே!



**கிரகநிலை:** தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் புதன், சனி - தைரிய வீரிய ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), சூரியன் - சுக ஸ்தானத்தில் சந்திரன் - பஞ்சம ஸ்தானத்தில் குரு - ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய் - பாக்கிய ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 07-04-2025 அன்று செவ்வாய் பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 10-04-2025 அன்று புதன் பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-04-2025 அன்று சூரிய பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-04-2025 அன்று ராகு பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-04-2025 அன்று கேது பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-04-2025 அன்று புதன் பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நிதானத்தோடு செயற்பட்டால் நினைத்ததை எல்லாம் அடைய முடியும் என்று இருப்பதைக் கொண்டு சிறப்புடன் எளிய வாழ்வு முறையை அமைதியுடன் விரும்பும் மகர ராசி நேயர்களே. இந்த மாதம் நன்மைகள் கிடைக்கக் கூடிய காலகட்டமாகும். எடுத்த காரியம் கைகூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும். தாயின் உடல்நலத்தில் தகுந்த அக்கறை காட்ட வேண்டும். வழக்கு தொடர்பான விவகாரங்களில் உங்கள் மனம் விரும்பும் படியான வெற்றிகள் கிடைக்கும்.

**உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு:** பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். பிற இடங்களுக்கு மாற்றலும் கிடைக்கும். உங்கள் மேல் இருக்கும் நம்பிக்கையும் உயரும். உங்களது கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு முயற்சிகள் எடுத்தபின் நல்ல வேலை கிடைக்கும். தொழிலதிபர்களின் கடந்த காலங்களில் மனதில் இருந்த சஞ்சலங் கள் மாறி நம்பிக்கை ஒளி பிறக்கும். புதிய சந்தை வாய்ப்புகளைப் பெற்று சிறந்த முன்னேற்றம் காண்பர். பால்பண்ணை அதிபர்கள் தகுந்த முன்னேற்றம் பெறுவார்கள்.

**பெண்கள்:** நீண்ட நாட்களாக சந்தான பாக்கியம் இல்லாதவர்களுக்கு தெய்வ அனுகூலத்தில் குழந்தைகள் பிறக்கும். வாழ்க்கைத்துணை அன்புடன் இருப்பார். பிறமொழி பேசுபவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள். கலைத் துறையினருக்கு ஒப்பனையாளர்கள், ஆடை வடிவமைப்பாளர்கள், பாடல் சம்பந்தப்பட்டவர்கள், நடனக் கலைஞர்கள் போன்ற துறைகளில் உள்ளவர்கள் நல்ல முன்னேற்றம் காணலாம். நீங்கள் இதுவரை பட்ட கஷ்டங்கள் விலகி நன்மையே நடக்கும்.

**அரசியல்வாதிகள்:** பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு தாங்கள் நினைத் ததை




சாதித்துக் கொள்ள தகுந்த கால கட்டம் இது. நீங்கள் இழந்த பதவி, நற்பெயர் மீண்டும் கிடைக்கும். எந்த முடிவையும் அவசரப்படாமல் நிதானமாக எடுக்க வேண்டும்.

**மாணவர்கள்:** தொழில் நுட்பப் பயிற்சி மாணவர்கள் தங்கள் படிப்பில் தகுந்த அக்கறை செலுத்தி தேர்ச்சி பெறுவார் கள். நண்பர்கள் படிப்பு ரீதியிலும் குடும்ப ரீதியிலும் தகுந்த ஒத்துழைப்பு தருவார்கள். சமூக சேவைகளில் அதிக ஆர்வம் இருக்கும்.

**உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் புதிய வீடுகட்டும் எண்ணம் நிறைவேறும். உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். எதிர்பார்த்தபடி வருமானம் கிடைக்கும். குடும்பத் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். பிள்ளைகளுக்கு நல்ல வரன் அமை யும். பிரிந்து வாழ்ந்த தம்பதியர்கள் ஒன்று சேர்வார்கள். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். எதிர்பார்த்த அரசு வேலை வந்துசேரும்.

**திருவோணம்:** இந்த மாதம் பிரிந்த தம்பதியர் ஒன்று சேர்வார்கள். தொழிலதிபர்கள் தொழிலை விரிவு செய்து, புதிய பங்குதாரர்களையும் பெறுவார்கள். அரச ஊழியர்களின் வேலைப் பளு குறையும். ஒருசிலர் எதிர்பார்த்துக் காத்திருக்கும் பதவி உயர்வும், விரும்பிய இடத்துக்கு மாறுத லும் வந்துசேரும்.

**அவிட்டம் 1, 2 பாதங்கள்:** இந்த மாதம் உங்களுக்கு நன்மைகள் தரும் நாளாக இருக்கும். தொட்ட காரியம் அனைத்திலும் நன்மைகளைப் பெறுவீர்கள். நல்ல வருவாயையும் அடைவீர்கள். குடும்பத்தினர் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். தம்பதிகளிடையே இணக்கம் கூடும். வீட்டில் தடைப்பட்டு வந்த சுபகாரியங்கள் இனிதே நடக்கும். பிள்ளைகளுக்கு திருமண வரன்கள் கை கூடி வரும்.

**பரிகாரம்:** சனிக்கிழமைகளில் அனுமான் கோவிலை வலம் வரவும். வெற்றிலை மாலை கட்டி அனுமனுக்கு சூட்டவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வியாழன்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 8, 9, 10

**அதிஷ்ட தினங்கள்:** 2, 3, 29, 30

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர் மோடி...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில், இலங்கைக்கு அரச பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதியினால் சிறப்பு விருந்து வழங்கப்பட்டது. (ந-7,4)

## புனித மஹா...

அநுராதபுரத்துக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை விஜயம் செய்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அநுராதபுரத்தில் உள்ள புனித ஜய ஸ்ரீ மஹா போதியில் வழிபாட்டில் ஈடுபட்டார்.

இது தொடர்பில் தனது எக்ஸ்தளத்தில் பதிவொன்றை இட்டுள்ள இந்தியப் பிரதமர்,

"அநுராதபுரத்தில் உள்ள புனித ஜய ஸ்ரீ மஹா போதியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் பிரார்த்தனை செய்தேன். பௌத்த மதத்தில் மிகவும் மதிக்கப்படும் இடங்களில் ஒன்றில் இருப்பது மிகவும் பணிவான தருணம் இது அமைதி, ஞானம் மற்றும் ஆன்மீகத் தொடர்ச்சியின் உயிருள்ள சின்னமாகும். புத்தரின் போதனைகள் எப்போதும் நம்மை வழிநடத்தட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். (ந-7,4)

## தேசிய மக்கள்...

படுத்தும் கோசல நுவான் ஜெயவீர (வயது-38) என்ற பாராளுமன்ற உறுப்பினரே மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார். (ந-7,4)

## பாதுகாப்பு...

வியலாளர் சந்திப்பில் அக்கட்சியின் கல்விக்கான செயலாளர் புபுது ஜயகொட இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகளை சீனா ஏற்கெனவே தொடங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு எழுபது ஆண்டுகளாக இலங்கை எந்த நாட்டுடனும் இது போன்ற பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்றும், இது வரலாற்றில் மிக மோசமான துரோகம் என்றும் ஜயகொட கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தான தன் மூலம் சீனா இலங்கையை ஒரு இந்திய-அமெரிக்க நட்பு நாடாகக் கருதத் தொடங்கியுள்ளது என்றும், இதற்குப் பதிலளிக்கும் விதமாக சீனா இந்தப் புதிய பாதுகாப்புக் கூட்டணியை நிறுவத் தொடங்கியுள்ளது என்றும் புபுது ஜயகொட மேலும் குறிப்பிட்டுள்ளார்.(ந-7,4)

## ராமர் பாலத்தை...

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த பாரதப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று உலங்கு வானூர்தியில் இராமேஸ்வரத்தைச் சென்றடைந்தார்.

இதன் போது இராமநவமி நன்நாளில் இராமர் பாலத்தினை தரிசிக்கும் வாய்ப்பினை நான் பெற்றதாக பாரதப் பிரதமர் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

இலங்கையிலிருந்து திரும்பும் வழியில், ராமர் பாலத்தை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. அயோத்தியில் சூரியத் திலகர் விழா நடந்து கொண்டிருந்த அதேசமயத்தில் இது நிகழ்ந்தது. இருவரின் தரிசனமும் கிடைத்த பாக்கியம். பிரபு ஸ்ரீராம் நம் அனைவரையும் ஒன்றிணைக்கும் சக்தி. அவரது ஆசீர்வாதம் எப்போதும் நம் மீது இருக்கட்டும் என தான் விமானத்தில் சென்று கொண்டிருக்கும் வீடியோ ஒன்றை எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (ந-7,4)

## தேவாலயங்களு...

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான புத்திக மனதுங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு கர்தினால் மல்கம் ரஞ்சித்திற்கும் பேராயர் இல்லத்திற்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் பெரிதும் பாதிக்கப்பட்ட கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், கட்டுவாபிட்டியவில் உள்ள புனித செபஸ்தியன் தேவாலயம், மட்டக்களப்பில் உள்ள சியோன் தேவாலயம் என்பனவற்றுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ந-7,4)

## இலங்கையுட...

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் இனத்தை வஞ்சித்திருக்கும் பிரதமர் மோடிக்கு இலங்கையின் உயரிய விருதான மித்ர விபூஷண விருதை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வழங்கியிருப்பது பொருத்தமானது தான் என்றும் கூறியுள்ளார். (ந-7,4)

## போதைப்...

பாற்றுமாறு கோரி பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாணிக்கபுரம் பகுதியில் உள்ள பெண்கள் ஒன்றிணைந்து மாணிக்கபுரம் கிராம அலுவலர் அலுவலகம் முன்பாக தமது கிராமத்தில் போதைப் பொருள் பாவனையால் பல்வேறு சமூக சீரழிவுகள் இடம்பெற்று வருவதாகவும் அதனை உடனடியாக உரியவர்கள் கட்டுப்படுத்தி எமது இளம் சந்ததியினர் மற்றும் கிராம மக்களைப் பாதுகாக்குமாறும் கோரி குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மதுவை ஒழிப்போம் மக்களைக் காப்போம், உழைத்து வாழப் பழகு ஊரை அழித்து வாழாதே, போதைப் பொருளை ஒழிப்போம் விசமிகளை அழிப்போம், போதையால் ஊரை அழிக்கின்றாயே உன் சந்ததி மட்டும் நிலைத்துவாழுமா? போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளும் போராட்டத்தின் போது காட்சிப் படுத்தப்பட்டிருந்தது.

இறுதியில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் மற்றும் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரி ஆகியோரிடம் கையளித்தனர்.

அத்தோடு போராட்டத்தைத் தொடர்ந்து குறித்த பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபடுவதாக அடையாளப்படுத்தப் பட்ட மூன்று வீடுகளுக்குச் சென்ற மக்கள் அவர்களது வீட்டு வாசல்களில் பதாதைகளையும் காட்சிப்படுத்திவிட்டுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,4,100)

## போதை மாத்...

பனை செய்யப்படுவதாகவும் கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த 18 வயது இளைஞனே கைது செய்யப்பட்டவராவார்.

இதன்போது அவரது உடைமையில் இருந்து 10 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது 75 போதை மாத்திரைகள் அவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டன.

விசாரணைகளின் பின் சந்தேக நபரை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-7,4,33)








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம்; நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2639)(1005) 076 825 7716 (ஆகாஸ்)

போட்டோக் கொப்பி
இருபக்கம் 3/-
(3871)
(1st Team Paper 2025)
கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம் 0760 53 83 29

# தமிழில் உரையாற்றிய பாரதப் பிரதமர் மோடி



(இராமேஸ்வரம்)

பாரதப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கான விஜயத்தினை நிறைவு செய்த தன் பின் ராமர் பயணித்த வழியில் இந்தியாவின் இராமேஸ்வரத்தைச் சென்றடைந்தார்.

அங்கு இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய பாரதப் பிரதமர் உரையின் ஆரம்பித்திலும் நிறைவிலும் தமிழில் உரையாற்றியதுடன் தமிழ் மொழியின் பெருமையையும் எடுத்துரைத்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த பாரதப் பிரதமர் நரேந்திர மோடி,

தமிழ் மொழியின் பாரம்பரியம் உலகில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் வியாபித்துள்ளது.

21ம் நூற்றாண்டில் தமிழகத்தின் பாரம்பரியத்தை மேலும் முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல வேண்டும்.

மீனவர்களின் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் மத்திய அரசு துணை நிற்கும்.

மத்திய அரசின் முயற்சியால் கடந்த 10 ஆண்டுகளில் 3,700 மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து தமக்குக் கடிதம் எழுதுபவர்களின் கையெழுத்து ஆங்கிலத்திலேயே உள்ளது.

எனக்கு கடிதம் எழுதும் அரசியல் தலைவர்கள் கையெழுத்தை யாவது தமிழில் போடுகள்.

நன்றி, வணக்கம், மீண்டும் சந்திக்கிறேன் என தனது உரையை பிரதமர் மோடி நிறைவு செய்தார்.

(ந-7,4)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில்
28 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதி முகப்புடன் பதினேழு இலட்சம் ரூபாய் (17,00 000/=), இரண்டாம் காணி (நடுப் பகுதி) பதினைந்து லட்சம் (15, 00 000/=), பின் பகுதிக் காணி எட்டு லட்சம் ரூபாய் (8,00 000/=)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 ½ Km, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km, மந்திகை ஆஸ்பத்திரி 1 Km, பருத்தித்துறை வீதி 600m, மாலு சந்தி 1 Km தூரம்.
- தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம், மாலு சந்தி பிள்ளையார் கோயில் 1 Km தூரம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை, நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை.
(3872)
(பார்வையிடும் நேரம் காலை 8.00 – மாலை 6.00 மணி வரை)
தொடர்புகளுக்கு:
076 860 2770, 076 987 8617
076 935 3971

நம்பினால் நம்புங்கள்
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.
(3816)
காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்
076 008 6961, 077 844 9861,
076 776 3291

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

உ
சிவமயம்
SIVA POOMI
சிவபூமி முதியோர் இல்லம்
சுழிபுரம்
18 ஆவது ஆண்டு விழா



அழைப்பிதழ்
காலம் : 07.04.2025 திங்கட்கிழமை
மாலை 4.00 மணி
இடம் : சிவபூமி முதியோர் இல்லம் (சுழிபுரம்)
தலைமை
கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)
பிரதம விருந்தினர்
திருமதி. இராஜாம்பாள் பாலச்சந்திரன்
(அமெரிக்கா)
கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்
நாடக அரங்கம்
திரு.பு.கணேசராஜா அவர்களின் [நாடக ஆசிரியர்]
தயாரிப்பில்
- மாவை நித்தியானந்தனின் முட்டை...
- என்னவென்று சொல்வேனடி...
(3868)
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
- சிவபூமி அறக்கட்டளை-

விற்பனைக்கு உண்டு
1. நல்ல நிலையில் உள்ள 10 HP குறம்ரன் மோட்டார் 15 HP ஸ்டாட்டருடன் ஆட்டா சக்தி 24" கல் இயந்திரம்.
2. பாவித்த 12" கிறைன்டர்.
3. 2" காபற் உடன் (11அடி) புள்ளிகளுடன்.
4. 7" சிறிய கிறைன்டர்.
ஆகிய பொருட்கள் விற்பனைக்கு உண்டு.
(C-2636)
தொடர்புகளிற்கு : 076 264 3841

SRI SOMASKANDA COLLEGE PUTTUR
பழைய மாணவர் சங்க
ஆண்டுப் பொதுக் கூட்டம்
2025/2026
யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்
காலம் :- 20.04.2025 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணி
இடம் :- கேட்போர் கூடம், யா/ ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்
தலைமை :- திரு. சி. திரிகரன்
நிகழ்ச்சி நிரல்
- மரபுவழிப் பொங்கல்
- நட்பு நிலை மென்பந்து கிரிக்கெட் (மாணவர்கள் எதிர் பழைய மாணவர்கள்)
- தலைமையுரை
- அதிபர்கள் கருத்துரை
- ஆண்டறிக்கை
- கணக்காய்வறிக்கை
- பிரேரணைகளாக உள்ள உபவிதித் திருத்தங்களை யாப்பில் உள்ளீர்ப்புச் செய்தல்
- புதிய நிர்வாக சபைத் தெரிவு
எனவே அனைத்துப் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையும், பழைய மாணவர்களையும் தவறாது கூட்டத்தில் பங்கு பற்றி கல்லூரியின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக ஆலோசனைகளை வழங்கி ஒத்துழைக்குமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றேன்.
நன்றி
பராகஜேந்திரன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி - புத்தூர்
(C-2641)

காணி விற்பனைக்கு
நீர்வேலி சிறுப்பிட்டியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
ஒரு பரப்பின்
விலை 12 லட்சம்
(3870)
தொடர்புகளுக்கு:
077 820 9424

விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
(1004)
திருமுருகன்
கொம்நெற்
321, K.K.S Road,
Jaffna.
077 755 4528
கிளைகள்
வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கொழும்பு

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2640)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. [illegible], பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.